விலை அணா 2

# திராவிடநாடு

மலர் 14. இதழ் 50



சாதிக் கொடுமையை ஒழிக்க, ஐதராபாத் மந்திரிகள் முன்வந்திருக்கிறார்கள். அதன்படி, கலப்புத் திருமணங்களைச் செய்துவைப்பது என்பது அவர்களுடைய வேலைகளில் ஒன்றாக இருக்குமாம். ஜூன் 15ந் தேதி யோமின் பேட்டை எனுமிடத்தில் ஆதித் திராவிடர்களுக்கும், சாதி இந்துக்கள் எனத் தம்மை அழைத்துக் கொள்பவர்களுக்குமிடையே கலப்புத் திருமணங்கள் பல நடைபெறப் போகின்றன, 'புரோகிதராக'யிருந்து நடத்திவைக்கப் போவது இராமசாமி எனும் ஒரு துணை மந்திரி! முதலமைச்சர் இராமகிருஷ்ணராவும், ஏனைய மந்திரிகளும் போய்க் கலந்து கொள்ளப்போகிறார்கள். சுயமரியாதை மணம் வீசுகிறது, அங்கே!

*

கோடி கோடியாக இலாபம் சம்பாதிப்போருக்கும், இலட்சாதிபதிகளாக விளங்குவோருக்கும் எப்படி வரிகள் போடலாம் என்பதுபற்றி அமெரிக்கா ஸ்வீடன், ஜப்பான் முதலிய நாடுகளுக்குச்சென்றுகண்டறிந்துவர, டில்லியிலிருந்து சந்திரசேகர், முகர்ஜி, நக்வி எனும் மூன்று அதிகாரிகள் இம்மாதம் கிளம்பப்போகின்றனராம். இது பற்றி ஆராயவேண்டுமானால், இவர்கள் போகவேண்டிய இடம் ருஷ்யாவே தவிர அமெரிக்காவா?—என்று கேட்காதீர்கள். இது தான், 'மாடல்' சோஷியலிசம்!

*

விபசாரம், விவாகரத்து, கற்பழித்தல் போன்ற குடும்பக் கட்டுப் பாட்டைக் குலைக்கக்கூடிய செய்திகளை வெளியிடக் கூடாதென்று பத்திரிகைகளைக் கட்டுப்படுத்துவதென்று எகிப்திய சர்க்கார் முடிவுசெய்திருக்கிறார்கள். இதே சமயத்தில் இந்தோனேஷிய சர்க்காரும், ஒரு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, வெளிநாட்டாரின் பணபலத்தில் நடைபெறும் பத்திரிகைகளின்




நடவடிக்கைகள் இனிமேல் கட்டுப்படுத்தப்படுமாம்.

*

சர்க்கார் துறையைச் சேர்ந்த பெரும் தொழிற்திட்டங்களை மத்திய சர்க்காரே நடத்தவேண்டுமென்றும், ராஜ்யசர்க்கார்கள் அல்ல என்றும் திட்டக் கமிஷன் முடிவு செய்திருப்பதாக நீர்ப்பாசன உதவி மந்திரி ஜெய்சுக்லால் கடந்த ஏப் 5-ந்தேதி டில்லி பார்லிமெண்டில் தெரிவித்துள்ளார்! எப்படியிருக்கிறது அக்கிரமம்—பார்த்தீர்களா!!

*

திராவிடத்தில் என்ன இல்லை?–என்று அடிக்கடி கூறுகிறோமே, அதை நிரூபிக்க இதோ ஒரு சேதி: முதல் தடவையாக, ருஷ்யா காப்பிக்கொட்டை வாங்குகிறது. இங்கிருந்து. இதற்காக ரூ. 40 லட்சம் பெறுமான 6160 மூட்டை காப்பிக் கொட்டை ஜூன் 8ந்தேதியன்று மங்களூரிலிருந்து கொச்சிக்கு அனுப்பப்பட்டது. கொச்சியிலிருந்து இந்தச் சரக்கை ருஷ்யக் கப்பல் ஏற்றிக்கொண்டு ருஷ்யாவுக்குப் போகும்.

*

"நியாயம் வழங்குக!" "பலாத்காரம் ஒழிக!" என்று முழக்கம் எழுப்பிக்கொண்டு,கையில் தீவட்டிகள் ஏந்தியவண்ணம், பாட்டியாலாவில் 10 பேர் கடந்த 7ந்தேதி ஊர்வலமாக வந்தனராம். இவர்கள் யார் தெரியுமா? பாட்டியாலா மகாராஜாவின் அண்ணன் தம்பி உற்றார் உறவினராம்! தங்களை அரண்மனையைவிட்டு, மகாராஜா வெளியே போகச் சொன்னதையொட்டி இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினராம். இவர்களுடைய ஊர்வலம் முடிந்ததும் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், அகாலி கட்சி, காங்கிரஸ், பி. சோ. கட்சி தலைவர்களும் கலந்து கொண்டு இவர்கள் கோரிக்கையை ஆதரித்தனராம். காலம் மாறிப் போச்சு, இல்லையா!

*

"முட்டாள் தனமான நண்பர்களுக்கு விஷயங்களை எடுத்து உணர்த்துவதைவிட புத்திசாலித்தனமான விரோதியுடன் விவாதிப்பது சுலபமாகும்" இந்தப் பொன்மொழியினைக் கூறியது யார் தெரியுமா? நேரு! எங்கேயென்று கேட்கிறீர்களா?—அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி விவாதத்தில். அங்கு சொல்லவேண்டிய அவசியம் என்ன என்கிறீர்களா? ...!...!...!

*

"கல்கி" ஏடு, இந்திகுறித்து இந்திய சர்க்காரின் வெறியைப் பற்றி எழுதுகிறது:- "இதர உயர்வுகளுக்கும், உத்தியோக உயர்வுகளுக்கும், இது கட்டாய அம்சமாக வைத்திருப்பதில்தான் சாஸ்திரியாரின்பொடிஇருக்கிறது." என்ன பொடி தெரியுமா? ரயில்வே இலாகாவிலிருப்போர் அனைவரும் கட்டாயமாக இந்தி கற்கவேண்டும் என்பதுதான்! இந்தப் 'பொடி' விரைவில், தபால் தந்தி இலாகாவிலும் பின்பற்றப்படுமாம். ஏற்கனவே, நாணயத்தில் இந்தி இடம்பெற்றுவிட்டது. இப்போது, டில்லியின் ஏனைய இலாக்காக்களிலும் 'நைசாக' நுழைக்கப்படுகிறது.

★

ஆண்டுச் சந்தா ரூ. 7

மலர் 14 இதழ் 50 17-6-56

# சகலத்திலும் 'சைபர்'தான்!

ஒரு நாடு. வளமும் நலமும் கொழித்து விளங்குகிறது என்று கூற வேண்டுமேயானால், அது கீழ்க்கண்ட ஐந்து துறைகளிலும் செழிப்பாக விளங்கவேணடுமென்கிறார். தொழிற் சரிதம் எழுதவந்த வொர்ட்ஸ் எனும் பேராசிரியர். விவசாயம் - தொழில்வளம்- வாணிபம்-நிதி - போக்குவரத்து இவ்வைந்துமே நாட்டின் நாடிகள் என்கிறார்.

பொன்னும் மணியும் மின்னும் வைரமும் தருவதோடன்றி மக்கள் வாழ நெல்லும் கம்பும் கோதுமையும் வழங்குவது பூமியன்னை தான். எனவே, விவசாயம் மிக மிக இன்றியமையாததாகும். இந்தப் பொருள்களைப் பெற மனிதன் ஆதிகாலத்தில் என்னென்ன சங்கடங்களைத் தாங்கினானோ, அறியோம் நாம். ஆனால் அவன் அன்று எப்படி மண்ணைச் செப்பனிட்டு, விதையிட்டு, நாற்றுப் பறித்து, நட்டு அறுத்து வாழ்ந்தானோ அந்த முறையில் இம்மியளவு கூட மாறுதல் கண்டோமில்லை. உலகத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் எத்தனை எத்தனையோ மாற்றங்களைச் சந்தித்துவிட்டான் மனிதன். ஆனால், நாமோ, இன்னும் ஏரும் கலப்பையுமே ஏந்திக்கொண்டுள்ளோம். அதுமட்டுமல்ல, பண்படுத்த வேண்டிய காடும் மேடும் ஏராளமிருக்கிறது, திருஇடத்தில். நன்செய் புன்செய்களாகக் கூடிய புறம்போக்குகள் ஏராளமிருக்கின்றன. அவைகளுக்குத் தேவையான நீர்வளம் கிடைக்க வழி என்ன செய்யப்பட்டிருக்கிறது? அணைக்கட்டுகள் உண்டா? புது ஆறுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறனவா? 'பம்பு' வைத்து நீர் பெறவும் மின்சார சக்தி உற்பத்தி தான் அதிகம் உண்டா? கிடையாது. கிடையாது என்பதுமட்டுமல்ல, அணைகளுக்கும், நீர்த்தேக்கங்களுக்கும் கோடிகோடியாகப் பணம் கொட்டிச் செலவழிக்கப்படுகிறது வடக்கில். இங்கோ, ஒரு பாலாற்றில் தண்ணீர் கொண்டுவருவதற்கே இன்னும் மைசூர் சர்க்காருடன் சமரசத் தூது போய்க்கொண்டிருக்கிறோம் என்கிறார்கள், எத்தனையோ ஆண்டுகளாய்!

இந்நிலையில் சர்க்காரின் புள்ளி விபரம் மட்டும் தெரிவிக்கிறது. இந்திய உப கண்டத்திலேயே அதிகம் தரிசு கிடக்கும் இடம் தெற்குதான் என்பதாக. தரிசு, தளிர் நிலமாக வாய்ப்புள்ளதா, வடவர் ஆட்சியில்? எட்டாண்டாட்சியில் என்ன பெற்றோம் நாம்?

அடுத்தது, தொழில் வளம், சொல்ல வேண்டாம், இதைப்பற்றி ஒரு நாட்டின் செல்வத்துக்கு ஆதாரமான துறை இது! பொருள்களைச் செய்யவும், செய்யும் முறைகளை அறியவும், ஆக்கிய பொருள்களை வெளியிடங்களுக்கு அனுப்பவுமான காரியங்கள் ஏதாவது நடைபெறுகிறதா இங்கு? நாடுகள் வாழவும், வீழவும் மிகமிக இன்றியமையாத துறை இது. இத்துறையில் நாம் எவ்வளவு ஏமாளிகளாயிருக்கிறோமென்பதில் சந்தேகமில்லை. இந்நிலையில் அண்மையில் டில்லி மந்திரி ஒருவர் சொல்லுகிறார் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி ஆரம்பிக்கப்படும் புதுத் தொழில்கள்யாவும் மத்திய சர்க்காரின் பொறுப்பில் தானிருககுமே ஒழிய, மாகாண சர்க்கார்களின் வசம் விடப்படமாட்டாது என்று! தப்பித் தவறி, ஏதேனும் ஒன்றிரண்டு இங்கு ஆரம்பித்தாலும், அவைகளுக்கும் நாம் 'எஜமானர்களல்ல;' அவர்கள் தான்.

வாணிபத் துறையில், எவ்வளவு சீரும் சிறப்புடன் வாழ்ந்தது திராவிடம் என்பதை சரிதங்கள் செப்பும். உரோமரும், கிரேக்கரும், சாவகமும் எப்படி எப்படி நமது கடலோரப் பட்டினங்களில் காத்துக் கிடந்தன என்பது பெரிய கதை! ஆனால், அந்தக் காலம். இப்போதோ வாணிபம் செய்ய எந்தப் பொருளுமில்லை. அப்படி ஏதாவது நம்மிடம் உற்பத்தியாகும் கைலித் துணி, கைத்தறித் துணி போன்றவைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பலாமென்றாலோ, அதிகாரம் நம்மிடமில்லை; வடக்கே இருக்கிறது! டில்லி விரும்பினால்தான், நமக்கு வாய்ப்பு. இதனால், டாடாவும் பிர்லாவும் டால்மியாவும் பஜாஜும் போட்டி போட்டுக்கொண்டு வணிக

வேந்தர்களாய் இருக்கிறார்கள் வடக்கில்; வாடுகிறோம் நாம் இங்கே.

நிதி, தொழில் வளம் பெருகவும் வாணிபம் அதிரிக்கவும் அவசிய மாகும். ஆனால், ஏது நம்மிடம்? வடக்கே, பாங்குகள் ஏராளமிருக்கின்றன, வடவருக்கு உதவி செய்ய. தெற்கே ஏது? தனிப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்துக்கே, ஏது பணம்? முக்கியமான வரி இனங்களையும், வாணிபத் துறையால் வரும் வருமானத்தையும் கொண்டு சென்று விடுவதால், அடிக்கடி டில்லியை நோக்கித்தானே, தண்டனிட்டு பிச்சை கேட்க வேண்டி இருக்கிறது.

நவீன யுகத்தில், தொழில் வளத்துக்கு மூலாதாரமாகக் கருதப்படுவது போக்குவரத்தாகும். அத்துறையில், தெற்கு எவ்வளவு பின்தங்கி இருக்கிறது என்பது சொல்லுந்தரமன்று, இதுபற்றி அண்மையில் டில்லி பார்லிமெண்டில் சிலர் கேட்டார்கள். "தென்னாட்டில் எவ்வளவோ இடங்களில் புதிய ரயில் பாதைகள் போடவேண்டியிருக்க, ஏன் மேலும் மேலும் வடக்கிலே அதிக பாதைகளைப் போடுகிறீர்கள்?" என்று.

அதற்கு நேரு பண்டிதர், "என்ன செய்வது? எங்கு அதிகத் தொழிற்சாலைகள் உள்ளனவோ அங்குதான் ரயில் பாதைகள் போடவேண்டுமென்பது சர்க்காரின் கொள்கை. அதன்படி போடுகிறோம்" என்றார். தென்னாட்டில் தொழிலில்லை! அதனால் புதிய இரயில் பாதைகளும் இல்லை!! என்றார்.

இவ்விதம், ஒரு நாட்டின் வாழ்வுக்கு எவையெவை இன்றியமையாதவை என்று கருதப்படுகிறனவோ அவைகளில் ஏதோ ஒன்றிரண்டைப் பெற்றோமே, இரண்டொன்றைப் பெறவில்லை என்பதல்ல நிலைமை, சகலத்திலும் சைபர்தான்! விவசாயத்தில் வேதனை, தொழில் வளத்தில் தரித்திரம், வாணிபத்தில் வறுமை, நிதி நிலைமையில் கையேந்தும் வாழ்வு, போக்குவரத்திலோ போதாத நிலை.

இதைக் குறிப்பிட்டுத்தான், 'ஏனய்யா இந்த நிலை?', என்று கேட்டு வருகிறோம், நாம். அப்படிக் கேட்டு வந்தும், தக்க பதில் தரப்படுகிறதா, உதவிகள் அளிக்கப்படுகிறதா என்றால் இல்லை. உலகமே போற்றும் திட்டம் என்று பேசப்படும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் ரூபாய் 5000 கோடி செலவழிக்கப் போவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் நமக்குக் கிடைக்கப்போவது சுமார் 200 கோடி கூட இல்லை! 'இதுபோதாது', என்று நிதியமைச்சர் சுப்பிரமணியம் சொல்லுகிறார் — அதிகம் வேண்டுமென சென்னை சட்டசபையே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது — நாட்டின் நல்லறிவாளர்களும் கண்டனக்குரல் எழுப்பிவருகிறார்கள் — இருந்தும் இந்த வாரம் சென்னைக்கு வந்திருக்கும் ஐந்தாண்டுத் திட்டத் துணை மந்திரியொருவர் கூறுகிறார், "போதாதா உங்களுக்கு இத்தொகை?" என்பதாக! மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால் டில்லி தருவதாக வாக்களித்திருக்கும் தொகை மிகவும் அதிகமானதாம்! அறிவிக்கிறார், அமைச்சராகயிருக்கும், அவர்!

விவசாயம்—தொழில்வளம் வாணிபம்—நிதி — போக்குவரத்து, இவை ஐந்தும் ஒரு நாட்டின் நாடிகளன்றோ என்கிறார் வொர்ட்ஸ்! நாடிகளனைத்தும் இழந்து நிற்கிறோம் என்கிறோம் நாம்! செப்பனிட்டுத் தரும் எமது சீலர்கள் வாழ் டில்லி என்று தெந்தினா பாடுகின்றனர் — இங்குள்ள காமராஜர்கள். ஆனால் வடநாட்டு மந்திரி கேட்கிறார், போதாதா உங்களுக்கு என்று!!

நாட்டின் நிலையையும் அமைச்சரின் திமிர் கலந்த கூற்றையும் கண்டால், அழுவதா சிரிப்பதா என்றே தோன்றவில்லை.

நாம், எங்கே சென்றுகொண்டிருக்கிறோம்—நமது தாயகத்தின் எதிர்காலம் எது என்பதும் விளங்கவில்லை. திகைக்கிறோம்! தேம்புகிறோம்!!

ஏளனம்தான் பரிசாக வருகிறது, இதயமற்ற ஆதிக்கக்காரர்களிடமிருந்து.

இந்நிலையில் "திராவிடநாடா? பிரியலாமா?" என்று சிலரும், "பிரிந்து செல்ல விரும்பும் பித்தர்கள்" என்று வேறு சிலரும் பேசக் கிளம்பியுள்ளார்கள்.

வாய்மூடி மௌனியாயிருந்த ஆச்சாரியாரும் பேசுகிறார்; அவரது முயற்சிகளைக் கண்டிக்கும் காமராஜரும் கர்ஜித்து வருகிறார்.

இந்தக் கிழமை ஏடுகளைத் தொட்டால், இதே பேச்சுகளையும் தலையங்கக் குறிப்புகளையுமே காண்கிறோம்! சென்னைக்கு வந்த டில்லிசபைத் தலைவர் அனந்தசயனம் (அய்யங்கார்!) கூடப் பேசுகிறார், "நாம் திராவிடநாடு இயக்கத்தை மறந்துவிட்டு இருப்பதற்கில்லை" என்பதாக.

கேளாக் காதினராகயிருந்தோரும், தத்தமது கித்தாப்புகளை விட்டு, "நம்மை" அறிய ஆரம்பித்துள்ளார்கள்! அதனை எடுத்துப் பேசவும் ஆரம்பித்துள்ளார்கள்!

இப்படி நம்மீது கண்டனமும், காரசாரப் பேச்சும் வீசுவோருக்காகத் தான்போலும் 'மெயிலில்' ஒரு சேதி வந்துள்ளது. மெயில், நமது ஏடல்ல; திராவிட நாட்டைக் கேலி செய்யும், இதழ்!!

ஆச்சாரியாரும் காமராஜரும், "திராவிட நாடா?" என்று கேட்டுக்கொண்டிருக்கும் இந்தச்சமயத்தில் இலங்கை வாழ் நம்மவர்களுக் கிழைக்கப்படும் அநீதிகள் பற்றிச் செய்திகள் வருகின்றன. கடைகளில் கொள்ளை! கலவரம்! துப்பாக்கிப் பிரயோகம்! — இப்படி இருக்கிறது, அங்கே.

முன்பிருந்து இன்னும் தீர்க்கப்படாமலிருக்கிறது, தமிழர்களின் வெளியேற்றப் பிரச்சினை.

இந்நிலையில் விரைவில் நேருபண்டிதர் இலண்டனுக்குச் செல்ல இருக்கிறார்—காமன்வெல்த் நாடுகள் கூட்டத்தில் கலந்துகொள்ள. சிறு நாடு இலங்கையும் காமன்வெல்த் நாடுகளில் ஒன்றல்லவா!!

அங்கே, பண்டாரநாயகாவுடன் இந்தப் பிரச்சினைபற்றி, நேரு பண்டிதர் பேசுவாரென்றுதானே எதிர்பார்ப்போம் நாம். ஆனால், சூழ்நிலை அப்படியில்லையாம்! நேரு அநேகமாக இதுபற்றியெல்லாம் பேசப்போவதில்லையாம்!!

அதுகூட விசித்திரமல்ல, இந்தப் பிரச்சினையைப்பற்றி உத்திரப் பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஒருவர் சொன்னாராம், 'மெயில்' நிருபரிடம், "யூனியன் சர்க்கார் இதுபற்றி ஏன் கவலைப்படவேண்டும்? பாதிக்கப்படும் தென்னிந்திய மக்களே இதற்குப் பரிகாரம் தேடிக்கொள்ளலாம்!" என்று.

எவ்வளவு அலட்சியமும் ஆணவமும் அலைமோதுகிறது, அவர் கூற்றில். இது, வடநாடு! இதனுடன் தான் நாம் சேர்ந்திருக்கவேண்டுமாம்—"போதாதா, நாங்கள் கொடுத்தது?" என்று கேட்கிறார், டில்லி அமைச்சர், இனனொருவர், ஏற்படப்போகும் ஆலைகளையும் எங்கள் வசமே வைத்துக்கொள்ளப்போகிறோம் என்கிறார். நாட்டின் வளமும் நலமும் குலுங்குவதற்குள்ள வழிகள் என்று கூறப்படும் ஐந்து துறைகளிலுமோ, நாம், ஆண்டிகளாயிருக்கிறோம்! இருந்தும், நாம் திராவிடநாடு கோருவது, பித்துத்தனம், பேதமை என்கிறார்கள் தேசிய பீரங்கிகள்!!

★

## வருந்துகிறோம்

பட்டுக்கோட்டை அஞ்சாநெஞ்சன் அவர்களின் அருமைத் துணைவியார் எதிராஜ் அம்மையார் அவர்கள் கடந்த 25-ந்தேதி மாலை இயற்கையெய்திய செய்தி கேட்டு வருந்துகிறோம். பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

[ ஒரு உரையாடல் ]

# செல்லுமிடந்தோறும்!

'சென்ற இடமெல்லாம் சிறப்பு!" என்று சொல்லிக்கொண்டே வந்தார், என் நண்பன்.

"கற்றேருருக்குத்தானே..." என்றேன் நான்.

"அப்பா! காமராஜரைப்பற்றிச் சொல்லவருகிறேன்...நீ என்னமோ பழமொழியை நினைவூட்ட ஆரம்பித்துவிட்டாயே...பம்பாயில் அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் வரவேற்பினைப்பற்றி அறிவாயா? என்ருன்.

புரிந்துகொண்டேன் அவன் குறும்பை! போன மந்திரிகளையும், காங்கிரஸ் தலைவர்களையும், மராட்டிய மக்கள் கல்கொண்டும் மண்கொண்டும 'கர்ண கடூரமாக' வரவேற்ருர்களாம் பம்பாயில். ஆனல், நமது காமராஜர்தான் அவ்வித ஆபத்துக்கு ஆளாகாமல் தப்பித்தாராம். இதைபபற்றி எழுத வந்த 'பேரிகை' எனும் ஏடு சொல்லுகிறது, காமராஜரை மந்திரியென்றும் தலைவர் என்றும் கருதாததால் விட்டுவிட்டார்கள் எனும் பொருள் தொனிக்க. அதைப் படித்துவிட்டு, வந்துவிட்டான் போலும் இவன், என்ற கருத்தில்.

"...அதற்கு இவர் என்னப்பா செய்வார்? இவரைப்பற்றி பம்பாய் மக்களுக்குத் தெரிந்திருந்தால், தானே! வட நாட்டிலிருப்பர்களுக்கு, தென்னுட்டுத் தலைவர்களைப்பற்றி எங்கே தெரிந்திருக்கிறது? சர்தார் பட்டேலைத் தெரிந்திருந்த அளவுக்கு சர்தார் வேதரத்னத்தைப்பற்றி அறிவரோ! கலேல்காரை அறியுமளவுக்கு கக்கனைத் தெரிவரோ! பட்டேலைப் பற்றித் தெரிந்த அளவுக்கு பக்தவத்சலத்தைக் கண்டிருப்பரோ!" என்றேன் நான்.

"நண்பா! நான், கேலிக்குக் கூறவில்லை. உண்மையிலேயே, நமது காமராஜருக்கு வரவேற்பு அளித்திருக்கிருர்கள், பம்பாயில்" என்ருன், உறுதியான குரலில்.

"எங்கே?"

"வேறு எங்கே கொடுத்திருக்கப் போகிருர்கள்? நகரசபை மண்டபத்திலா, மார்வாடிகள் சபையிலா, தமிழர்கள் வாழும்—தவறு!—வாழ்வதற்குப் போராடும்—தாராவியில்தான்......"

"ஓகோ!"

"அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்குப் போன வேறெந்தத் தலைவர்களும் கல்லடியையும் மண்ணடியையும்தான் வரவேற்பாகப் பெற்ருர்கள். ஆனல், காமராஜர் மட்டும்தான், இப்படியொரு வரவேற்பைப் பெற்ருர். என்ன காரணம் தெரியுமோ?"

"என்ன காரணம்?"

"எங்கு தமிழர்களிருந்தாலும் அங்கு அமைதியும் இருக்குமன்ரு, அதனல்! ஆனல், வரவேற்பைப் பெற்றுக்கொண்டு இவர் என்ன சொல்லிவிட்டு வந்தாராம் தெரியுமா?"

"என்ன சொன்ஞராம்?"

"தோலைச் சுரண்டி, தொல்லை வாழ்வு நடத்தும் உங்களைக்காணும் போது உண்மையிலேயே வெட்கமாயிருக்கிறது, அதைவிட வேதனை துளைக்கிறது என்னை, நீங்கள வாழுகிற இந்தப் பகுதியைப் பார்க்கிறபோது. மாதுங்காவுக்குப் போயிருந்தேன், மூன்று இலட்ச ரூபாயில் கட்டப்பட்ட தமிழ்ச் சங்கத்தைத் திறக்க. அங்கும் தான் நம் ஊர்க்காரர்கள் வாழ்கிருர்கள் — இங்கும்தான் நீங்கள் வாழ்கிறீர்கள். தவிக்கும் இந்தக் காட்சியைப் பார்க்கும் பொழுது எனக்கு மனவேதனையைத் தருகிறது. பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜிதேசாயிடம் இந்த அலங்கோலத்தை எடுத்துச் சொல்லி, ஏதாவது பரிகாரம் செய்யும்படிக் கேட்கிறேன். அவர் வாய்மூடி மௌனியாகயிருந்தால் நேருஜியிடமாவது சொல்கிறேன்... இப்படித்தானே பேசியிருப்பார், என்று நினைக்கிருய்".

"ஆமாம்! இதற்குத்தானே தாராவித் தமிழர் அழைத்துப் போயிருப்பார்கள்..."

"ஆனல், வரவேற்பைப் பெற்ற இந்தப் பாக்கியசாலி என்ன பேசிஞராம் தெரியுமா"

"என்ன பேசிஞர்?"

"அங்கு போயும் நம்மைப்பற்றிய கலக்கம் போகவில்லை. தி. மு. க. வைப் பற்றியே பேசியிருக்கிருர். எல்லோரும் காஙகிரசிலிருங்கள், என்று சொலலியிருக்கிருர்."

"இப்போது, தி. மு, க.விலிருப்பவர்களிலே எத்தனையோ பேர் காங்கிரசிலிருந்துவந்த காளைகள் தானே!"

"ஆமாம்......இருந்தாலும் இப்போது காமராஜரின் வேலை, சென்ற இடமெல்லாம் நமமீது சீறுவது தானே!"

நீங்கள் படித்துவிட்டீர்களா?

புத்தம் புதிய நூல்

சி. என். ஏ. தீட்டிய

**நாட்டின் நாயகர்கள்**

விலை அணு எட்டு

வியாபாரிகளுக்கு 25 o/o கழிவு. தனிப்பிரதி வேண்டுவோர் போதிய தபால் தலைகள் அனுப்புக.

பரிமளம் பதிப்பகம்,
காஞ்சீபுரம்.

"அப்படித்தான் படுகிறது...... தமிழரசுக்கழகத் தலைவர் ம.பொ.சி. அண்மையில் கேட்டிருக்கிறாரே, ஒரு கேள்வி. நீ, கண்டாயா?"

"என்ன கேள்வி!"

"யாரோ சிலர், திருச்சி மாநாட்டின்போது சீரங்கம் கோயிலுக்குள் செருப்பு மாட்டிக்கொண்டு நுழைந்ததாகச் செய்தி பெற்றுக் கொண்டு சீறு சீறென்று சீறியிருக்கிறாரல்லவா, காமராஜ். திருச்சியில்......

"பத்திரிகையில் படித்தேன்..."

"ஆமாம்! இந்தச் சீற்றம், பெரியார் அவர்கள்மீது ஏன் வரவில்லை? அவர், இராமன் பொம்மைகளை துடைப்பத்தால் நடுத் தெருவில் அடிக்கப்போவதாகத் தெரிவித்தும்...ஏன் வரவில்லை? — என்று கேட்கிறார், ம. பொ. சி..."

"சென்ற இடமெல்லாம் காமராஜ் இப்படி ஏன் பேசுகிறார், நம்மைப் பற்றி?"

"பழமொழி அறிவாயா! மனதிலிருப்பதுதான் மொழியில் வருமென்று ................................ சதா இப்போது நம்முடைய விஷயம்தான் அவருடைய மனதை உறுத்திக்கொண்டிருக்கிறது. அதிலும், தேர்தலில் வேறு நிறகப் போவதாகச் சொல்லியிருக்கிறோம் பார். அதனால், இப்போதுமுதலே 'கோதா'வுக்குத் தயாராகிறார்..."

"நம்மிடம் 'கோதா'வுக்கு வரும் இந்தப் 'பயில்வானுக்கு' உள்ளுக்குள்ளேயே குழப்பமும் கிளர்ச்சியும் உருவாகி வருகிறதாமே!"

"சுதேசமித்திரன் கார்ட்டூனைச் சொல்கிறாயா? ஒரு காரில் ஒரு பக்கம் காமராஜ் உட்கார்ந்துகொண்டு ஓட்டுகிறார்; அதே காரில் இன்னொரு பக்கம், இன்னொரு திசையை நோக்கி சுப்ரமணியம் ஓட்டுகிறார்!— என்று போட்டிருக்கிறதே படம்"

"பார்த்தேன்; இப்படி மந்திரி சபைக்குள்ளேயே கருத்து வேற்றுமைக் கனல் கொழுந்துவிட்டெரிவதைச் சகிக்கமுடியாமல் ஒரு முதலமைச்சர் ராஜினமா செய்துள்ளாரே, தெரியுமா, உனக்கு?"

"ராஜினமா செய்திருக்கிறாரா!"

"ஆமாம்; ஆனல் இங்கல்ல, சிரியாவில்!"

"இதுபோல அங்கும் ஏதாவது கோஷ்டிச் சண்டையோ?"

"விஷயம் அவ்வளவு பிரமாதமானதுகூட அல்ல! சிரியாவிலிருந்து 10,000 டன் கோதுமையை அல்ஜீரியாவில் போராடிக் கொண்டிருக்கும் பிரஞ்சு துருப்புகளுக்காகக் கேட்டது பிரான்ஸ். அதைக் கொடுக்க ஒரு மந்திரி, 'ஆர்டர்' போட்டார்..."

"ஊம்!"

"கூடாது! பிரான்ஸ், அல்ஜீரியாவில் அட்டூழியம் நடத்துகிறது என்று இன்னும் சிலர் சொன்னர்கள். இப்படியொரு கருத்து வேற்றுமை தனது மந்திரி சபைக்குள் எழுந்ததைக் கண்டு சையத் காஜி எனும் முதலமைச்சர், பதவியை ராஜினமா செய்துவிட்டார். கருத்து வேற்றுமை கொண்ட மந்திரிகளை வைத்துக்கொண்டு அரசினை ஒழுங்காக நடத்திச் செல்ல முடியாது என்று கருதி!"

"அதைவிட, மிகப்பெரிய அளவில் கருத்து வேற்றுமை நிலவுவதோடன்றி, கோஷ்டியுமன்றோ சேர்த்துக்கொண்டு வருகின்றனராம், சுப்பிரமணியமும் இராமநாதபுர சேதுபதியும், பக்தவச்சலமும், ஷெட்டியும்".

"தட்சிணப் பிரதேசத்துக்கு ஆதரவாகத்தானே?"

"ஆமாம்!"

"இப்படிப் பேசுபவர்களை 'உதவாக்கரைகள்' என்று கொப்பம்பட்டி என்கிற ஊரில் காமராஜ் பேசியிருக்கிறாரே!"

"ஆமாம்! பத்திரிகைகளில் வந்திருக்கிறது. 'தினமணி' அதைக் குறிப்பிட்டு தலையங்கமே தீட்டியிருக்கிறது......"

"அப்படிப்பட்ட 'உதவாக்கரைகளை'த்தான், தன்னுடைய மந்திரி சபையில் வைத்துக்கொண்டிருக்கிறார். கண்டிக்கவோ, பதவியை விட்டுப் போங்கள் என்று கூறவோ தைரியமில்லை..."

"உதவாக்கரைகளுடன் உறவாடும் தீரர்செல்லுமிடந்தோறும் நாம் உருத்தெரியாமல் போகப் போகிறோம் என்று உறுமுகிறார்......"

"அந்தக் கட்டம்தான் ஆச்சரியமாயிருக்கிறது, எனக்கு......"

★

---

**முகப்பில்**

**விரைவில், இவர்களது கூட்டமே அழிந்துபோய்விடக்கூடுமோ!-என்று** சரிதாசிரியர்களால் பரிதாபத்தோடு கூறப்படும் ஒரு கூட்டத்தின் மதத்தலைவரின் படம்தான் இந்த இதழின் முகப்பிலே இருப்பது.

ஒருகாலத்திலே யூதர்களின் நாடென விளங்கும் இஸ்ரேலின் வடபகுதியிலே சீரும் சிறப்போடும் வாழ்ந்தார்கள். காலமும் போராட்டங்களும் இவர் தம் வாழ்வைச் சிதைத்தது, பாலஸ்தீனத்திலுள்ள யூதமக்களுடன் கலந்து வாழும் நெருக்கடி ஏற்பட்டது. அப்போது, உமது பழக்கவழக்கங்களுக்கும் எமக்கும் வேற்றுமை உண்டு— நீ இருக்கிற இடத்திலே நாங்களுமிருந்தால் எங்கள் மதிப்பு கெட்டுவிடும்—உங்களுடன் திருமணத் தொடர்புகள் செய்து கொள்ளமாட்டோம் — என்று இப்படி பேதமும் பிளவும் (இங்குள்ள பார்ப்பனர்களைப்போல!) உண்டாக்கிக்கொண்டு, மத்திய பாலஸ்தீனத்திலுள்ள நேபுளஸ் எனும நகருக்கு அருகில் ஒரு இடத்தில் (அக்கிரகாரம்போல!) தனியாக வாழ்ந்தனர். இங்கு இவர்களைத் தவிர, வேறுயாரும் வாழ அனுமதித்தது கிடையாது, கடவுளைக்கூட தங்களுக்கென்று தனியாக உண்டாக்கிக் கொண்டனர். நேபுளஸுக்கு அருகிலுள்ள ஜெரிசிம் எனும் குன்றின் உச்சியில் கோயில் ஒன்றையும் அமைத்தார்கள்.

இன்றுவரை, இவர்கள்மட்டும்தான் அந்தக் கோயிலுக்குள் செல்லலாமாம். இவர்களுடைய கூட்டத்துக்குள்தான், திருமணங்கள் நடைபெறுமே ஒழிய, பெண் கொள்ளவோ, பிள்ளை கொள்ளவோ வேறு இடங்களுக்குச் செல்லுவதில்லையாம். இப்படி, உயர்வு தாழ்வு கற்பித்து, ஏனையோருடன் ஒட்டாமல் வாழ்வதால், இவர்களது தொகை படிப்படியாகக் குறைந்து இப்போது 140 தான் இருக்கிறதாம்! சாமரிடான் என்று அழைக்கப்படும் இக் கூட்டத்தின் வரலாற்றைப் படித்தால், உயர்வுதாழ்வு வெறியால் தங்களைக் கெடுத்துக் கொண்டவர்கள் என்பதை உணரலாம்.

# நாற்பதுபேரில் ஒரு நாடு!

[உடுமலையான்]

நம்முடைய எதிர்கால வளத்திற்கு வழிவகை காண நமக்கு நிறைய வசதி இருக்கிறது, வாய்ப்பு இருக்கிறது; ஆனால் அதைச் செயல்படுத்த நம்மிடம் அதிகாரம் இல்லாத காரணததால் நாம் ஆமைகளாய், ஊமைகளாய் மாற்றானுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். அவன் காலால் இட்ட வேலையை நாம் தலையால் செய்து கொடுக்கிறோம். அவன் எட்டி உதைத்தால் கட்டிக் கரும்பே என்று கட்டிப்பிடிக்கிறோம். ஆண்ட ஒரு இனத்தின் நிகழ்கால நிலை இது. இந்த நிலை மாற நாமிருக்கும் நாடு நமதாக வேண்டும. இது நமக்கே உரிமையாம் என்பதும நடந்தாக வேண்டும் என்றே நாம் பன்னிப் பன்னிக் கூறிவருகிறோம்.

*

பூகோளப் படத்திலே தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலையில், உருவிலும் திருவிலும் நம்மை விடப் பன்மடஙகு குறைந்திருக்கும் நாடுகளும் சுயேச்சையாக விளங்கி முன்னேறுகின்றன.

பார்க்கும் இடங்களிலெல்லாம் சுதந்திரப் போராட்டங்கள் படிக்கும் செய்திகளெல்லாம் அவை பற்றியே, வாரம் ஒரு முறை ஏதேனும் ஒரு நாட்டின ஒரு பகுதி அடக்குமுறையையோ, அளவு மீறிய அதிகாரத்தையோ எதிர்த்துக் குரல்கொடுக்காத செய்தியைப் படிக்கத் தவறுவதில்லை.

திராவிடம் பிரிந்தால்தான் நமக்கு நல்வாழ்வு. இல்லையேல் நிச்சயமதாழ்வு என்று முழக்கி, அதற்கு நம் பண்டைப் பெருமையினையும் இன்றைய தாழ் நிலைமைகளையும் சான்றாக்கிக் காட்டுகிறோம்.

உலக சரித்திரம் நம்மை மேலும் ஊக்குவிக்கிறது. நடைமுறைகள் நமது நடவடிக்கைகளுக்கு மேலும் வேகம் தரக் காததிருக்கிறது, இந்த நிலையில் இந்தியப் பேரரசிடமிருந்து பிரிந்தால் வாழமுடியாது. பாரதமாதாவை மறுபடியும் வெட்டுவதா, அன்னையின் பெருமை அழிந்துபடவிடுவதா என்று முடக்கு வாதம் பேசப் புறப்படுகிறார்கள் பாரதமாதாவை ஏற்கெனவே ஒரு முறை, வெட்டுவதற்கு' உடந்தை'யாயிருந்த உத்தமர்கள்.

---

கேட்க விந்தையாகத்தான் இருக்கிறது! ஆனால், இப்படியும் ஒரு நாடு இருக்கிறதே,

---

திரு இடம பிரிந்தால், இவர்களுக்கு பதவியில் இடம் இருக்காது என்றும், இப்போதைய இடந்தேடிகளுக்கு 'கனம்' இருக்காது என்றும் அச்சப்பட்டு, அந்த அச்சத்தில் ஜுரம் கண்டவர்கள் உளறுவது போல் உளறுகிறார்கள்.

இந்த உரிமை உணர்ச்சி, சுதந்திர தாகம் பெறுவது தவறல்ல என்பது மட்டுமல்ல, தவிர்க்க முடியாததும்கூட என்பதை அவர்கள் உணரத்தான் போகிறார்கள். தானும் உணராமல், உணர்ந்தவர்கள் சொல்வதையும் கேட்காமல் இருக்கும் சில கெட்டி மண்டைகளுக்காகவே போலும் சிலபல செய்திகள் வந்து கொண்டேதான் இருக்கின்றன.

எட்டுக் கோடி மக்கள் ஜனத்தொகையும், பல்லாயிரக் கணக்கான மைல்கள் பரப்பும் கொண்ட நம் திரு இடம் நமதாக வேண்டும் என்று குரல் கொடுக்கிறோம் நாம.

அப்படிக் கேட்பதே பிரிவினை மனப்பான்மை, உங்கள் பக்கம் திரும்புவதே பாவம், என்று சொக்கரிக்கிறார்கள் நம்மை ஆளவந்தவர்கள்.

மைனர் மேஜராகி நிர்வாகத்திற்கு பக்குவப்பட்டு, நிர்வாகத்தைக்கேட்டால் மைனர் சொத்தை நிர்வகித்து வந்தவனுக்கு கோபம் வருமல்லவா, அதைப்போலத்தான் இவர்களும் நம்மீது கோபப்படுகிறார்கள்.

*

கோடிக் கணக்கான பேராகிய நாம் கேட்பதை இல்லை என்று கூறுபவர்கள், நாற்பது பேர் மட்டுமே கொண்ட ஒரு குடி அரசு நாடு உலகில் இருக்கிறது என்று சொன்னால் நம்புவதே கஷ்டம் தான்.

**ஒரு நாட்டின் ஜனத்தொகை நாற்பதே பேர்தான், கேட்கக்கூட வேடிக்கையாக இருக்கிறது. அதற்கு ஒரு ஜனாதிபதி, ஒரு தனி அரசியல் சட்டம் நிர்வாக அமைப்பு எல்லாம் உண்டு.**

அதன் பரப்பளவு நாற்பதே ஏகர் அளவுதான். உலகத்திலேயே இதுதான் மிகச் சிறிய குடியரசு நாடு என்று சொல்லப்படுகிறது.

ஸ்வீடன் தேசத்தின் வடபகுதியில் இருக்கும் இந்தக் குடியரசு நாடு ஆசன் ஹோல்மன் என்ற பெயர் கொண்டது. எழுபது வய்து

நிரம்பிய வால்பிரிடஸ் கஸ்டவ் என்ற விவசாயிதான் இந்தச் சின்னஞ்சிறு குடியரசின் ஜனாதிபதி.

நமக்கென ஒரு எல்லை, சட்ட திட்டம், உரிமைகள் அதிகாரம் ஆகியவை வேண்டும். அப்போதுதான் நாம் மனிதத்தன்மை பெற்றவர்களாக மதிக்கப்படுவோம் என்ற உணர்வு உரிமைத் தாகம் அந்த நாற்பது பேரிடமும் எழுந்தது.

அவர்களது தாகமும் தணிந்தது. அவர்களது கனவு நனவாகி விட்டது.

முதல் உலகமகாயுத்தம் முடிந்து வெர்ஸெல்ஸ் உடன்படிக்கையை விவரித்து ஒரு பத்திரிகையில் வெளியான கட்டுரையை அங்கிருந்த விவசாயிகள் சிலர் படித்தார்கள். ராஜதந்திரிகளும் அரசியல் வாதிகளும் எல்லைக் கோடுகளை வகுத்துக் கொண்டும் குடி அரசுகளை ஸ்தாபித்துக் கொண்டும் இருக்கும் போது நாமும் ஏன் அப்படிச் செய்யக் கூடாது என்ற கேள்வி எழுந்தது. அதற்கு அவர்களே விடையும் கண்டார்கள். தங்கள் தங்களுடைய நிலங்களை எல்லாம் ஒன்றாக இணைத்து தனி சட்ட திட்டம் இயற்றிக் கொண்டார்கள்.

இப்போது ஆசன் ஹோல்மன் என்ற இந்தக் குடியரசுக்கு ஒரு மந்திரிசபை உண்டு. வெளிநாட்டு இலாகா, உள்நாட்டு நிர்வாகம், நீதி கப்பற்படை இலாகா ஆக ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மந்திரி உண்டு. கப்பற்படை இலாகா இந்தக் குடியரசுப் பாதையில் உள்ள ஒரு ஏரியைக் கண்காணித்து பாதுகாப்பதற்காகும்.

எல்லைகளில் உடுப்பணிந்த சிப்பாய்கள் காவல்காக்கிறார்கள். ஜனாதிபதியின் விசேஷ அனுமதிச் சீட்டு இல்லாமல் யாரும் குடியரசு எல்லைக்குள் நுழையக் கூடாது என்று ஆறு மொழிகளில் அச்சடித்து அவர்கள் விளம்பரப் படுத்துகிறார்கள். வேடிக்கை பார்ப்பதற்கே இவ்வளவு கட்டு திட்டம் என்றால் பிறகு கேட்க வேண்டுமா?

நாற்பது பேரையும், நாற்பது ஏகர் பரப்பளவை மட்டுமே கொண்ட ஒரு பகுதி, குடியரசாக விளங்குகிறது என்ற செய்தியைப் படித்தால், ஒரு காலத்தில் ஆண்ட இனத்திற்கு மீண்டும் உணர்ச்சி, வருவது தவறா?

இந்தக் குடி அரசில் ஒரு வேடிக்கை என்னவென்றால், அத்து மீறி உள்ளே நுழைபவர்கள் மீது சிப்பாய்கள் நடவடிக்கை எடுப்பது மிக மெதுவாகத்தானாம்.

இந்தக் குடியரசில் மனித சக்தி குறைவாக இருப்பதால், அந்த சிப்பாய்களெல்லாம் மரத்தால் செய்தவையாம்! இந்தக் குடியரசின் மந்திரி சபையில் ஒரு ஓவியர், ஒரு தோட்டக்காரன், ஒரு வக்கீல், ஒரு விவசாயி ஆகியவர்கள் மந்திரிகளாக இருக்கிறார்கள். ஜனாதிபதி தலைமையில் மாதமொரு முறைகூடி பிரச்னைகளை ஆராய்வார்களாம். மந்திரிசபைக் கூட்டத்தில் அந்தப் பிரதேசத்தின் பூர்வீக மொழி என்று அவர்கள் நம்பிக்கொண்டிருக்கும் மொழியில் பேசுவார்கள். லத்தீனும் ஸ்வீடிஷ் மொழியும் கலந்த ஒரு கலப்பு மொழி என்கிறார்கள் போய்விட்டு திரும்பிய விருந்தினர்கள். மந்திராலோசனை முடிந்ததும் ஜனாதிபதி விருந்தளிப்பார்.

ஆண்டுக்கொரு நாள் குடியரசுப் பிரஜைகளெல்லாம் சேர்ந்து தேசியத் திருவிழா நடத்துவார்களாம். ஆடல், பாடல், விருந்து ஆகிய சகல கேளிக்கைகளும் நடக்கும். மரத்தால் செதுக்கிய உருவங்களின் ஊர்வலம் கூட உண்டு. வெளிவிவகார மந்திரிதான் இந்த ஊர்வல ஏற்பாட்டிற்குப் பொறுப்பாம். அந்த உருவங்களில் பல லட்சிய வாசகங்களை செதுக்கப் பட்டிருக்குமாம்.

"அதிர்ஷ்டம் அடிக்கடியும், துரதிஷ்டம் சில வேளைகளிலும் உனக்கு வரும்"

"நீ எவ்வளவு அதிகமாக உழைக்கிறாயோ அவ்வளவுக்கவ்வளவு பாலைவனப் பகுதி சுருங்கி செழிப்பாவதை உணருவாய்" என்பன போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்குமாம்.

சில ஆண்டுகளுக்கு முன் ஆசன ஹோல்மனின தனித் தன்மையையும, சுயாட்சியையும் அங்கீகரிக்கும்படி ஸ்வீடன் பிரதமரான டகோர்லண்டருக்கு ஜனாதிபதி வால்பிரடஸ் கடிதம் எழுதினார். ஸ்வீடனிலிருந்துவரி வசூலிக்க யாராவது உள்ளே வந்தால், அவர்களைக் கண்டவுடன் சுட்டுத்தள்ளுமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டார். இதைக் கேட்டதும் எர்லண்டர் ஜனாதிபதிக்கு ஒரு பதில் வரைந்தார். ஆனால் அதை தபாலில் போடவில்லை. ஒரு வேளை வால்பிரடஸுக்கு கொண்டுபோய்க் கொடுப்பதற்கு பயந்துகொண்டும் வாளாயிருந்திருக்கலாம என்றும் செய்திகள் சொல்லுகின்றன!!

குடியரசுத் தலைவரைக் கண்டால் அவ்வளவு பயம்போலும். வரிகொடோம் என்று போர்க்கொடி உயர்த்திய ஒரு "சுண்டைக்காய், குடியரசின் போக்கைக்கண்டு ஸ்வீடன் பிரதமர் மிரண்டுவிட்டாராம். அப்படி போர்க்கொடி உயர்த்துவதற்கு, அந்தக் குடியரசுப் பிரஜைகளான நாற்பது பேரும் தங்களுக்கென ஒரு எல்லை வகுத்துக்கொண்டு சுதந்திரப் பகுதியின் பிரஜைகளாக அதிகாரம் முழுவதும பெற்றிருந்ததால்தான முடிந்தது.

தனித்துவாழமுடியாது கூடாது என்று கூறுகிற "ஐயோ பாவங்களுக்கு" இந்தச் சின்னஞ்சிறு குடியரசு ஒரு சவாலாக இருக்கிறது என்று கூடச் சொல்லலாம். உலகில் எவ்வளவோ நாடுகள் தனித்தியங்குகின்றன என்பதை மறந்தார உணர்ந்தும், திராவிடமும் தனித்தியங்க முடியும் என்பதும் ஐயந்திரிபற தெரிந்திருந்தும கூட நம்மிடையே சிலர், எஜமான விசுவாசத்திற்காக முடியாது என்கிறார்கள்.

தனித்தியங்க முடியும் என்பதைப பல கோணங்களில் நின்று நாட்டவர்க்கு விளக்கவே நம்மை நாம் அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய பணி எந்நாளும் வீண்போகப் போவதில்லை என்பதை நாம் உணருவோம். ஆனால் மற்றவர்களுக்கும உணர்த்தத்தான் திருச்சியில் கூடினோம்.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

அதிகப் பிரதிகள் வேண்டுவோர், ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைக்குள், முன் பணத்துடன் தெரிவிக்கக்கோருகிறோம்.

—பொறுப்பாளர்




## ரஷ்யா

மாலடோவ் —எனும் பெயர், அறியாத அரசியல்வாதிகள் இருக்க முடியாது. வெளிநாட்டு விவகாரங்களில் கைதேர்ந்த ராஜதந்திரியான இவர், ரஷ்ய சர்க்காரின் வெளிநாட்டு மந்திரிப் பதவிலிருந்து அண்மையில் விலகிவிட்டார், இதற்குக் காரணம், அண்மையில் யுகோஸ்லோவேகியத் தலைவர் டிட்டோ ரஷ்யாவுக்குச் சென்றிருப்பதுதான் என்று பேசப்படுகிறது. டிட்டோவை, ஸ்டாலின், தான் உயிரோடிருக்கும் வரை அவமதித்தே வந்தார்! ஸ்டாலின் காலத்திய பெரிய தலைவர்களில், மாலடோவும் ஒருவர். டிட்டோவைத் திருப்திப் படுத்துவதற்காக, புல்கானின் சர்க்கார் மாலடோவை விலகும்படிச் செய்திருக்கக் கூடுமென ஒரு கருத்து, உலக அரங்கில் உலவுகிறது!

## அமெரிக்கா

அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் மீண்டும் உடல் நலம் குன்றி, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். எனினும் ரஷ்யப் பிரதமர் புல்கானின் தனக்கு விடுத்துள்ள வேண்டுகோளுக்கு விரைவில் பதிலனுப்ப இருக்கிறாராம். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, கானடா முதலிய நாடுகளுக்கு புல்கானின் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவ்வேண்டுகோளில், உலக சமாதானத்தில் தங்களுக்குள்ள நல்லெண்ணத்தைக் காட்டும் வகையில் ஒவ்வொரு நாடும் உடனடியாகத் தத்தமது இராணுவத் தொகையையும் செலவையும் குறைத்துக் கொள்ளவேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார். உலக சமாதானத்துக்கு அறிகுறியான இந்த வேண்டுகோளுக்கு அமெரிக்கா என்ன பதில் தருகிறதென்பதை அகில உலகமும் கவனிக்கிறது.

## அர்ஜென்டைனா

தென அமெரிக்காவிலுள்ள அர்ஜென்டைனாவை ஆண்ட சர்வாதிகாரியான பிரான் விரட்டப்பட்டு அங்கு புது ஆட்சி மலர்ந்தது பலருக்கு நினைவிருக்கலாம். அந்தப் புது ஆட்சியின் தலைவரான தளபதி ஆரம்புரு, இன்னும் தேர்தலை நடத்தி ஜனநாயக முறையை அமுல் நடத்தாதது கண்டு அங்கு மீண்டும் கிளர்ச்சிகள் எழும்பியுள்ளன. இந்தக் கிளர்ச்சிகளுக்கு பிரானின் ஆதரவாளர்கள் மூல காரணமாக இருக்கலாம் என்று கருதப்பட்டாலும், இப்போதும் ஆரம்புரு, பொதுத் தேர்தலை நடத்த முயற்சிகள் செய்தால் நிலையான அரசாங்கம் ஏற்படக்கூடும் என்று கருதப்படுகிறது.

## பிரிட்டன்

பிரிட்டிஷ் பிரதமர் ஈடன், சிறு தீவு சைப்ரஸ் விஷயத்திலும் மலேயாவுக்குச் சுதந்திரம் கொடுப்பது சம்பந்தமாகவும் கொண்டிருக்கும் கொள்கையைக் கண்டித்து தொழிற்கட்சிப்பிரமுகரான அனுரின் பெவான் ஒரு யோசனையை வெளியிட்டுள்ளார், அடிமைப்படுத்தப் பட்டிருக்கும் காலனி நாடுகள் ஓய்வு ஒழிச்சலில்லாமல் பிரிட்டிஷ் அரசை எதிர்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்பதுதான் அவரது யோசனை! அப்போதுதான், பிரிட்டிஷ் அரசுக்குப் புத்தி வருமே ஒழிய, சமாதானமாக ஒருபோதும் பிரச்னைகளை அது தீர்க்காது என்கிறார்.

## சிங்கப்பூர்

"பெவான் சொல்லுவது உண்மைதான்!" என்று உரைப்பதுபோல சென்ற கிழமை சிங்கப்பூரின் பிரதமரான **டேவிட் மார்ஷல்,** தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டார். சிங்கப்பூருக்குச் சுதந்திரம் பெறுவது சம்பந்தமாக இவர் இலண்டனுக்குச் சென்று நடத்திய பேச்சு வார்த்தைகளில் தோல்வி கண்டதால் தன்னுடைய பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு. வழக்கம்போல அரசியல் பணிகளில் ஈடுபட முடிவு செய்துள்ளார்.

## பர்மா

பர்மாவுக்கு கடந்த 8-ஆண்டுகளாகப் பிரதமராயிருந்த நூவும் தன் பதவியைவிட்டு விலகியிருக்கிறார்! இவர் விலகக் காரணம், சீர்குலைந்து வரும் தன்னுடைய கட்சியைப் பலப்படுத்த என்று கூறப்படுகிறது. இதற்காக பிரதமர் பதவியிலிருந்து ஓராண்டுக் காலம், இவர் ஓய்வு பெற்றுள்ளார். மீண்டும், இவர் பிரதமராகிவிடுவாராம்.

## அல்ஜீரியா

அப்பப்ப சுதந்திரத்துக்காக அல்ஜீரியா கொடுத்து வருவதாகக் கூறப்படும் தியாகிகள் பட்டியல் நெஞ்சைத் திடுக்கிடவைக்கிறது. மேமாதம், கடைசி மூன்று வாரங்களில் மட்டும் 2500 அல்ஜீரியர்களை, பிரெஞ்சுத் துருப்புகள் கொன்றுபோட்டுள்ளனவாம். விடுதலைப் போராட்டம் 1954 நவம்பரில் ஆரம்பித்தது. அதுமுதல் 1956 ஜூன்வரை 19-மாதங்களில் 10,500-பேர் சாகடிக்கப்பட்டுள்ளனராம்! என்னே கொடுமை!!

★

# ஊர்வலம்

**['ஞானக்கண்' பேட்டி]**

எங்கே 'பேட்டி'க்குப் போவது என்கிற யோசனையிலிருந்த என் காதில், ஒரு குரல் ஒலித்தது. யார் பேசுவது என்று பார்த்தேன். அப்பய்ய தீட்சிதர், 'அடுத்தாத்து' அப்பளாச்சாரியிடம் எதையோ படித்துக் காண்பித்துகொண்டிருந்தார். பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் பார்த்து, சங்கராச்சாரியாருக்கு அவர் தீட்டியது எனத் தெரிந்தது. அவர் படித்துச் சொல்லியதை அப்படியே தருகிறேன்.

"பத்திரிகைகளில் வந்துள்ள சேதியைக் கண்டேன். மனசு, திக் என்று அடித்துக்கொண்டது. ஜகத் குருவாகிய தாங்களா, சாதாரணஜன்மம், தன்னை ஒரு ரிஷி என்று கூடச் சொல்லிக்கொள்ளாத ஜன்மம், தங்களைப் போல ஒரு பல்லக்கோ, அதைத் தூக்க பத்துப் பதினைந்து பேரோ வைத்துக்கொள்ளாத ஜன்மம், கேவலம் ஏராளமான சொத்துக்களும் வருமானங்களும்கூட இல்லாத—வினோபாவைப்போய் உதவி செய்யுமாறு கேட்பது? முதலில், நம்பக்கூட இல்லை. சீனு சொன்னான், 'மித்திரன்' 'தினமணியி'லே கூட வந்திருக்குடா, என்று. படிச்சேன், நேக்கு வெட்கமும் துக்கமும் கலந்துண்டுவர்றது. நாங்களெல்லாம், உங்களை நம்பிண்டிருக்கோம். இந்த நாஸ்தீகாளுடைய நடமாட்டத்தை அஸ்தமிக்கவைச்சு, நம்மையெல்லாம் பகவானுடைய அனுக்ரகத்துக்குப் பாத்திரமாக்க, பூலோகத்திலே எழுந்தருளியிருக்கிற ஒரே ஒரு மகான் சங்கராச்சாரிய ஸ்வாமிகள் தான்னு, நேத்துகூட, மணியம் மார்க்கண்டேய முதலியண்டே பேசினேன்—'சாமி! காஞ்சிபுரம் போனா, என்னையும் அழைச்சிண்டே போங்க. கலி காலத்திலே பகவானை நேரிலே பார்க்க முடியாதுன்னு சொல்றுங்க. அவரொட அவதாரம்போல விளங்கும், இவரையாவது, இந்தப் பாபி தெரிசிக்கணும்னு சொன்னான்" நீங்க, என்னடான்னா, கேவலம் ஒரு பட்டுப் பீதாம்பரம் கூட இல்லாத அந்த வினோபாவைப் போய் வேண்டிண்டிருக்கேள்! எங்க மதிப்பு என்னாறதுங்கிறதை, மனசிலே எண்ணினேளா? இடிஞ்சுபோயிருந்த நம்மவாளெல்லாம் உங்களோடு மகத்துவத்தைப் பேசி உலவிண்டிருக்கோம். "டேய், சுப்பு! சங்கராச்சார்யான்னா, சாமான்யமாடா? போய்ப் பார்த்தா, சாட்சாத் ஈசுவரனே எதிரிலேயிருக்காப்போலிருக்கடா! கண்ணை மூடிண்டு, அவர் ஜபிக்க ஆரம்பிச்சா, நேரே அவர் முன் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியிலேருந்து எல்லா கடவுளும் வந்து நிற்கிறுளாம்டா. நான், பார்க்கலே. தென்னண்டை மாடவீதியிலேயிருக்காளேன்னா, என் ஆத்துக்காரியொட அம்மா வோடெ தங்கச்சியொடெ மருமகனுக்கு பொண்ணுகொடுத்தவாளோடெ சொந்தக்காரா, அவா சொன்னா"—இப்படியெல்லாம், எவ்வளவு பேசிவர்றோம். இதுக்கெல்லாம் வேட்டுவைக்கிறது போலே செஞ்சுட்டேளே? நியாயமா! நீங்களா, போய், அந்த வினோபாவுடைய உதவியைக் கேட்கிறது. இப்படித்தான் மகாமேதை, ரொம்பப் புத்திசாலி, இந்த துஷ்டப் பசங்களை அடக்கிறதுக்கென்றேயிருக்கார்னு நாங்களெல்லாம் எண்ணிண்டிருக்கும் இராசகோபாலாச்சாரியாரும் அந்த வினோபாவண்டே, போயி, சொன்னாராம், "நீங்க இங்கே வந்திருப்பது நேக்கு ரொம்பதிருப்தி. இங்கேயிருக்கும் நாஸ்திகவாதிகளை அடக்கிறது உங்களுடைய பிரதான வேலையாயிருக்கணும்"னு அதுக்கே எங்கஊர்லேயிருக்கிற கழுத்து கார்மேகம் கேட்டான், "என்னா ஐயரே! 'எல்லாம் வல்லவனின்' நாமத்தை எப்போதும் ஜபித்துக் கொண்டிருக்கும் ஆச்சாரியார் போய், இவர் காலில் ஏன் விழுகிறார்? சூரசம்காரம் செய்ய அவரால் முடியலியா! அல்லது அக்கிரமக்காரர்னு முடிவு செய்து இவர்குரல் கேட்டு எந்த ஆண்டவனும் வரலியா!" என்பதாக. இப்போது, நீங்களே போய் வினோபாவோடெ உதவியைக்கேட்டு, எங்க மானத்தைவாங்கியிருக்கேள். கார்மேகம்வந்துடப்போறானேன்னு தலையிலே துண்டைப் போட்டுண்டு, மூடிண்டு மூணு நாளாத் திரியறேன். என்னதானிருக்கட்டும், நீங்க "நாஸ்தீகர்களை ஒழிக்க, நீங்க உதவி செய்யணும்"னு, வினோபாவைப் போய்க்கேட்கலாமோ. கேட்பானே கார்மேகம், 'என்யா! தன்கிட்டே எவ்வளவுநிலம், ஆஸ்தி, பவுன், வெள்ளி எல்லாம் வச்சிருக்காரு சங்கராச்சாரி. ஏதோ அந்த மனுசன் வினோபா. தள்ளாத காலத்திலும், தன் மனதிருப்திக்காக இப்படி ஒரு காரியத்திலே, காடு மலைன்னு பார்க்காமே, மேடு பள்ளம்னு கருதாமே, சின்னவூர் பெரியவூர்னு எண்ணாமே கால் நடையா நடந்துபோய் கால் ஏகர் அரை ஏகர்னு 'தானம்' வாங்கிறாரே! அவருக்கு, இவர், கொஞ்சம் தானம் கொடுத்தா, என்னவாம்? அதை விட்டுட்டு, உதவி கேட்கவல்ல போயிட்டாராம் உதவி ......!" இப்படி, அவன் கேட்டா, என்ன பதிலை நான் சொல்றது? பூதானம், சம்பத்தானம் கொடுகக மனம் வரலைன்னாலும் கைவசம் 'லாரியைபபோல' பெரிசாயிருக்கும் ஒரு இரட்டை மாட்டு வண்டி, அதுவுமில்லேனா ஆள் உயரத்துக்கு ஒருத்தன் தூக்கிண்டு போவானே வெள்ளித் தடி இதிலே எதையாவது கொடுத்திருக்கக் கூடாது? அதுதான், இல்லே—கொடுக்க மனசு வரல்லே. சும்மா தானிருக்கக் கூடாது. போயும் போயும் "நாஸ்தீகர்களை அடக்க, நீங்க உதவி செய்யணும்னா" கேட்கிறது! நாக்கைப் பிடுங்கிக்கலாமான்னு, இருக்கு நேக்கு' அப்படித்தான் ஆள் மூலம், சொல்லியனுப்பிச்சேளே அந்த மனுஷராவது உண்டு! இல்லே!ன்னு ஒரு வரியிலே பதில் சொல்லியிருக்கக்கூடாதோ? உங்களையும், என்னையும், ஊர்லே நம்மைப்போல இருக்கிறவங்களையும் கேலி பண்றதுபோலன்னா பதிலனுப்பிச்சிருக்கார் ஊம்! படிக்கப்படிக்கமானமினா போறுப்பலேயிருக்கு. **"கடவுளின் பெயரை எப்போதும் சொல்லிக்கொண்டு, பிறரை ஏமாற்றுகிறவர்கள் ஆஸ்திகர்கள் அல்ல..."** முதல் வாக்யத்தையே பார்த்தேளா! எப்போதும் சொல்லிண்டு ஏமாற்றுகிறோமாமே — ஊம் **"...ஆனால் கடவுள் பெயரைச் சொல்லாமல் பிறரிடம் அன்பும் இரக்கமும் காட்டுகிறவர்களே—உண்மையான ஆஸ்திகர்கள்"** யார் இந்தத் தி. மு. க, வின் நடத்தையைப போய் அவரண்டே சொல்லியிருப்பா? ஸ்பஷ்டமா, சொல்றுரே! கடவுள் பெயரைச் சொல்லாமல் பிறரிடம் அன்பும் இரக்கமும் காட்டுகிறவங்கனனு! தி. மு. க. புயலுக்கு உதவிசெஞ்சப்பவே, சொன்னேன், நீங்க ஏதாவது செய்யணும்னு. கேட்டேளா! முதல் புயல், இரண்டாவது புயல், கைத்தறித் துணி விற்பனை, காஞ்சிப் பச்சையப்பன் கல்

லூரி நிதி, சென்னை தியாகராய கல்லூரி நிதி......இப்படி அவனுங்க சக்திக்கு மேலே, ஜனங்களுக்காக என்னென்ன செஞ்சி வர்றானுங்க, அதை நினைச்சுத் தான், இப்படிப் பேசினாரோ, வினோபா...ஊம்... அவர் சொன்னதாப் பத்திரிகையிலே போட்டிருக்கிறதைப் படிச்சேளா? இந்தத் தி.மு.க. காராபேசறது போலவுமல்லவா, கடைசியிலே சொல்லியனுப்பிச்சிருக்கார் உங்களுக்கு "கடவுளைக் காப்பாற்ற நாம் கவலைப்படக் கூடாது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தி அவருக்குண்டு' ஊம்! இனிமேற்பட என்ன செய்யப்போறேள்? வேதம், உபநிஷதம், புராணம், இதிகாசம் எல்லாவற்றையும் கரைகண்டவான்னு நாங்கள் நினைச்சிண்டிருக்கும் உங்களுக்கேன்னா, இந்தப் புத்திமதியைச் சொல்லியிருக்கார்! புத்திமதியிலும் பொருள் இருக்கே—கடவுளைப்பற்றி நாம் ஏன் கவலைப்படணும்? அவருக்கு, தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடவா சக்தி இருக்காது? — என்றான்னா, கேட்கிறார். ஏன் சுவாமிகளே, இனிமேலே, என்னைப்போன்றவா, என்ன பண்றது? ஏதாவதுபேசப்போனா, கழகத்துக் கார்மேகம், வினோபாவொடெ வார்த்தையை எடுத்துவைச்சுண்டு "போய்யா" என்று சொல்வானே. ஊம்! பெருமூச்சும், யோசனையுமா, மனசை அலைக்கழிக்கிறது. இப்படியா, நீங்ககூட எங்களைத் தவிக்கவைக்கணும், இனிமே, என்னசொல்லி, இந்த தி.மு.க-வொட நான் வாதாடுவேன், ஒரே, கவலையாயிருக்கு!"

சிரித்துக்கொண்டே, இதைக் கேட்ட நான் கிளம்பினேன்.

★

# இந்தியின் அழகு!

இந்தி எப்படி பிறந்தது? இதோ அதுபற்றி 1888-ல் வங்கத்திலிருந்த ஆசிய சங்கத்தின் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை:

"மராட்டிய மண்டலம் சிதறியதோடு, சிப்பாய்க் கலகமும் அடக்கப்பட்ட பிறகு உள்ள காலத்தில் இந்துஸ்தானின் இலக்கிய வளம் எப்படியிருந்ததெனக் காண்போம். இந்தக் காலத்திற்றான் வட இந்தியாவில் அச்சகங்கள் உருவாயின; புதுமுறைப் பள்ளிகளும் அங்குமிங்கும் தலைக்காட்டலாயின. இப்பொழுதுதான் ஐரோப்பியர்களால் 'இந்தி' என்று அழைக்கப்பட்ட மொழி பிறந்தது. அது ஒரு காட்டு மொழியாகும். 1803ல் கில்கிரைய்ட் என்பாரின் போதனைப்படி லல்லுஜீலால் பிரேம்சாகர் எனும் நூலை எழுதலானார். அந்நூலில் அக்பரின் ஆஸ்தான புலவர்கள் கையாண்ட உருது மொழி நடையும், முச்சந்திகளில் கூடும் சகல மக்களின் பேச்சு நடையும் கலந்து எழுத முயன்றார். இந்நூலில் அரேபிய அல்லது பாரசீக மொழியில் வரும் பெயர்களையும் இந்திய மயமாக்கினார். இதனால், புதியஒரு கதம்பமாக இருந்தது அந் நூல்! இப்படி உருவானதுதான் இந்தி இதை, ஐரோப்பியர்கள் இந்தி என்று அழைக்கலானார்கள். படிப்படியாக, இப்படியமைந்த மொழியில் நூல்கள் ஏற்படலாயின. யாவும் உரைநடைக் காப்பியங்களே ஒழிய, இம்மொழியில் சிறந்த கவிதை நூல்களை ஆக்கமுடியவில்லை. மிகமிகப் பெரியவர்கள் எல்லாம் கவிதைகள் புனைய முயன்றனர்: எனினும் இயலவில்லை, ஆகவே, இப்போது வட இந்தியாவில் இப்போதுள்ள இலக்கியம் — ஆங்காங்குள்ள மொழிகளில் எழுதப்படும் கவிதைகள்தாம். பீகார், பாய்ஸ்வாரி, பிராஜ் முதலிய மொழிகளில்கவிதைகளிருக்கும். ஆனால் உரைநடை நூல்களோ இந்தியிலிருக்கும். இதனால்தான் அப்போதிருந்த இந்தி ஆதரவாளர்களால், எந்த மொழியினரையும் வலியுறுத்த முடியவில்லை. எந்தச் சிறப்பைக்காட்டி வலியுறுத்துவது?" என்று 1956 மே 5-ந்தேதிய இந்து இதழில் ஜார்ஜ் ஏ. கிரீயர்சன் என்பார் எழுதியுள்ளார். இந்த இந்தியைத்தான், பல்லாயிரம் ஆண்டுகளாக இயங்கிவரும் மொழி வளம் கொண்ட நம்மீது சுமத்துகின்றனர்!

# விந்தை!

சுரபானம் அருந்தியும், ஆடு மாடுகளைக் கொன்று தின்றும், அக்ரம வாழ்வு நடாத்திய இந்து மதச் சிரேஷ்டர்களாம் ஆர்ய முனிவர்களின் அடாச் செயலைக் கண்டு நொந்தார், புத்தர் என்பது சரிதம்! புதுமார்க்கம் காணவும், இதுவே காரணமாயிற்று!!

ஆனால், இன்று இந்துமதக் காவலர்களாக விரும்பும், டாக்டர் ராதாகிருஷ்ணன், ராசேந்திர பிரசாத், பிரகாசாபோன்ற ஆட்சித் தலைவர்கள், புத்தரையும் இந்துமத அவதார புருடர்களில் ஒருவர் என்பதாக வர்ணிக்கிறார்கள். புத்தரின் முககிய கோட்பாடுகளில் ஒன்று, மதுபானம் அருந்துதல் கூடாது என்பதாகும்! அண்மையில் 22டன்(!) மதுவகைகளும், 25000 கோழிமுட்டைகளும், 4000 கோழிக்குஞ்சுகளும், 2000 கோழிகளும், 1500 வாத்துக்களும், ஓரிடத்தில் விமானமூலம் கொண்டு போய் இறக்குமதி செய்யப்பட்டனவாம், ஒருவேளை உணவுக்கு. பெருமூச்சு விடாதீர்கள், 141 பேருக்காகத்தான் இவ்வளவும்! எங்கு தெரியுமா? இந்து மன்னர் — ஒரேஒரு இந்து மன்னர் — என்றெல்லாம் டாக்டர் ராதாகிருஷ்ணனால் போற்றப்பட்டு, சமீபத்தில் முடிசூட்டிக் கொண்டாரே நேபாள மன்னர், அவருடைய அரண்மனைக்குத்தான் இவ்வளவு பொருள்களும் வரவழைக்கப்பட்டன. முடிசூட்டுவிழா விருந்து இவ்விதம் கொண்டாடப்பட்டதாம்!

இந்தக் கொடுமையைக் கண்டித்தார் புத்தர், 2500 ஆண்டுகளுக்கு முன்பு புதிய மார்க்கம் கண்டார். உலகு அறியும் இந்த உண்மையை. ஆயினும், அவர் கண்டித்த காரியங்களைச் செய்தவண்ணமே, 'புத்தர் எமது அவதார புருடர்' எனும் புரட்டையும் செய்கின்றனர், புரோகிதர்கள். விந்தையாகத்தானே இருக்கிறது, இது!! ★

### வருந்துகிறோம்

கோலார் தங்கவயல் தி.மு.க. செயலாளரும் நமது நண்பருமான கே. ஜி. சின்னராசன் அவர்கள் 20-5-56 அன்று மாரடைப்பால் இறந்த செய்தி நம்மை துயரத்திலாழ்த்தியது. அவரது குடும்பத்தாருக்கும், நமக்கும் தோழரின் பிரிவு பெரிய இழப்பாகும். கழகத் தோழர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும், நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

# வினோபாவைக் கண்டேன்

தம்பி,

புனிதமான புத்தர் விழாவைக் கெடுத்துத் தொலைத்தான் பாவி,

தூய்மை நிரம்பிய தமிழ்ச் சங்கப் பொன்விழாவைப் பாழாக்கிவிட்டான் பாதகன்,

என்றெல்லாம் பழிசுமத்தப்படுகிறது உன் அண்ணன்மீது. ஏன்தான் நமக்கு இந்தத் தொல்லைகள் தாமாக வந்து தாக்குகின்றனவோ என்று நான் சிலவேளைகளிலே கவலைப்படுவதும் உண்டு — எனினும் என் செய்வது, சிலபல நிகழ்ச்சிகளில் நான் ஈடுபட நேரிடுகிறது—நான் ஈடுபடுவதனாலேயே, நிகழ்ச்சிகள் கெட்டுவிடுகின்றன என்று கூறி, நான் தாக்கப்படுகிறேன். அந்த முறையில், இதற்கு என்ன பழி சுமத்தப்படுமோ என்ற அச்சத்துடனேயே நான் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளவேண்டி இருக்கிறது. என் செய்வது?

**வினோபாவைக் கண்டேன்!** தமிழகத்தில் தண்ணொளி பரப்பும் நோக்குடன் தவபுதல்வர் வருகிறார், மும்மலங்களை விட்டொழித்திடச் சொல்லும் முனிபுங்கவர் வருகிறார், பூதானம் பெற்று, மக்களில் ஒரு சாராரின் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் பேராசையை விரட்டிடும் பெம்மான் வருகிறார், அவருடைய புனிதப் பாதம் பட்டதால், தமிழ் நாட்டின் சாபம் விமோசனமாகும்— என்றெல்லாம் பக்கம் பக்கமாகப் பத்திரிகைகள் எழுதியதுகண்டு, அவரைக் காணவேண்டும் என்று நானும் ஆவல்கொண்டேன் — உடனே ஒரு அச்சமும் பீடித்துக்கொண்டது — நாம் நுழைவதாலேயே, பல நற்காரியங்கள் நாசமாகிவிடுவதாகக் கூறும் 'நல்லவர்கள்' இருக்கிறார்களே. ஏழை எளியோர்பால் இரக்கம் காட்டச் சொல்லி, இரும்பு இதயங்களையும் கனியச் செய்யும் இணையற்ற திருத்தொண்டு புரிந்துவரும் வினோபாவை நாம் சென்று காண்பதால், பதறிக்கதறி, கை பிசைந்து கண் கசக்கிக்கொண்டு, இங்கும் வந்து தொலைத்தானா இக்கெடுமதியாளன்! நிம்மதியும் நிர்மலமும் பெறுவதற்கு ஏற்ற இடம் என்று இந்தக் 'குடில்' வந்தோம், இங்கும், விடமாட்டேன் என்று வந்துவிட்டானே இந்த வீணன் என்று ஏசித் தமது மனதுக்குத் தாமாகப் புண் ஏற்படுத்திக்கொள்வார்களே சில 'புண்ணியவான்கள்' என்று எண்ணினேன் — ஆவலை அடக்கிக்கொண்டேன்.

ஆனால், வந்ததும் வாராததுமாக வினோபா, திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவைகளைக் காண விரும்புகிறார், தமது பூதான இயக்கத்துக்கு ஆதரவு அளிக்கும்படி கேட்க விழைகிறார் என்று 'செய்திகள்' வந்தன.

அந்தப் பெரியாருடைய அந்த நோக்கத்தைச் சிலர் எப்படிக்கருதினர் என்பதை, இதழ்களில் வெளியான கேலிச் சித்திரங்கள் காட்டின.

ஒரு இதழில்—நாகப்பாம்புகள் படமெடுத்தாடுகின்றன- வினோபா 'மகுடி' ஊதுகிறார்—பாம்புகள், தம்பி, நாமும், திராவிடர் கழகமும்! பெயரே எழுதப்பட்டிருக்கிறது.

நச்சுப் பாம்புகளய்யா இந்தக் கழகங்கள்—என்று வினோபாவுக்கு எச்சரிக்கவும், அவர் 'மகுடி' ஊதி, உங்களை மயங்க வைப்பார் என்று நமக்கு எடுத்துரைக்கவும், அவ்விதம் படம் தீட்டினர்.

ஒரு குறிக்கோளைத் தம் இதயநாதமாகக் கொண்டவர் எவரும், அந்த குறிக்கோளுக்கு யாரிடமிருந்து ஆதரவு கிடைப்பதாயினும், பெற்றாக வேண்டும் என்று எண்ணுவதும், அதற்காக முயற்சிப்பதும், அவர்களுடைய உள்ளம் தூய்மையானது என்பதனையும், அவர்கள் கொண்டுள்ள கொள்கை 'தொட்டால் சுருங்கி'யல்ல என்பதையும் எடுத்துக் காட்டுவதாகும்.

அம்முறையில், ஒரு கட்சிக்கோ, குறிப்பிட்ட கூட்டத்துக்கோ, ஒரு ஜாதிக்கோ மதத்துக்கோ, என பூதானத் தொண்டு சொந்தமானதல்ல, அனைவருக்கும் இதிலே பங்கு உண்டு, ஏழை

அழுத கண்ணீர் துடைத்திடுவதே எம்மானுக்கு ஆற்றும் பணி என்று எண்ணி எவரும் இதிலே ஈடுபடலாம், என்று விநோபா அறிவிக்கிறார்!

எதனையும் தமதாக்கிக்கொண்டு—தமக்குச் சாதகமான தாக்கிக் கொண்டு—தமக்கு ஆதிக்கமளிக்கும் கருவியாக்கிக்கொண்டு பிழைக்க, கொழுக்க விரும்பும் 'குணவான்கள்' விநோபாவின் இயக்கத்தில் மற்றவர் எவரும் நுழைந்திடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணி, அடிகள் யாராருடன் தொடர்புகொள்ளவேண்டுமென்று ஆவல் தெரிவிக்கிறாரோ, அவர்களைப் 'பாம்புகள்' என்று சித்தரித்துக் காட்டுகின்றனர்.

இனி, விநோபா, நம்மீது பார்வையைச் செலுத்தமாட்டார் — படம் போட்டுக் காட்டிவிட்டனர்—என்று நான் எண்ணிக்கொண்டு—தொலைவிலிருந்தே அவர் நடாத்திவரும் தூய தொண்டு வெற்றிபெறுவது கண்டு மகிழலாம் என்று தீர்மானித்தேன். ஆனால், விநோபாவின் அழைப்பு என்னை விடாமல் துரத்திற்று! 'பாம்பு'—என்கிறார்களே, எப்படித்தான் இருக்கிறது பார்ப்போம் — என்று எண்ணிக் கொண்டார்போலும். விநோபாவைச் சந்தித்தேன். நான் பாம்பல்ல என்பதை அவர் புரிந்து கொள்ளாமலிருந்திருக்கமுடியாது!

பூஜிதரே! புண்ய புருஷரே! நீரோ பூதானம் கேட்கிறீர்! நீர் காண விரும்பும் அந்தப் புல்லர்கள், பூதானம் தரமாட்டார்கள், அவர்களோ காமராஜரிடம் பூதானம் கேட்டுத் தொல்லை தருகிறார்கள்—திராவிட நாடு கேட்கிறார்கள் — எனவே, அவர்களைச் சந்தித்து என்ன பயன் என்று விநோபாவைக் கேட்பதுபோல், ஒரு இதழ் விநோபா, தி. மு. க.விடம் பூதானம் கேட்பதுபோலவும், தி. மு. க. காமராஜரிடம் திராவிட நாடு தானம் கேட்பதுபோலவும், கேலிப் படம் வெளியிட்டது.

இது கண்டும் அந்த இதயசுத்தி உள்ள பெரியவர், தமது நோக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லை. சந்திக்கவேண்டும் என்ற தமது விருப்பத்தைத் தெரிவித்தார். விநோபாவைச் சந்தித்தேன்.

7—6—56 'கிராமோதயம்' இதழில் (சர்வோதய இதழ்) விநோபா—ம. பொ. சி. சந்திப்புப்பற்றிய கட்டுரையில்,

> "திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டு கழகங்களின் தலைவர்களைக்கூட சந்திக்க விரும்புகிறேன். அவர்களுடைய ஆதரவும் பூமிதான இயக்கத்திற்குக் கிடைக்குமென்று நம்புகிறேன்"

என்று விநோபா கூறியதாக வெளியிடப்பட்டிருக்கிறது. கழிபேருவகையுடன் கண்டு பேசிடத் தக்க கண்ணியமிக்கவர் விநோபா, என்று எப்படி என்னாலே எண்ணாமலிருக்கமுடியும். கண்டு பேசினேன்.

தயக்கத்துடன்தான் நான் சென்றேன்.

காங்கிரஸ் ஏடுகள் யாவும், விநோபாவை வாழ்த்தி வரவேற்பதையும், அர்ச்சித்து அஞ்சலி செலுத்துவதையும், அவர் அருளால் அஞ்ஞானம் அழியும், மெய்ஞ்ஞானம் பரவும். வகுப்பு வாதம் ஒழியும், வர்க்கபேதம் தொலையும், என்றெல்லாம் கூறிப் பூரிப்பதையும், அவருடைய முகத்திலே 'ஜோதி' காண்கிறோம், கண்களிலே அருள் வடிந்திடக் காண்கிறோம், அவர் நடையிலே காந்தியார் காணப்படுகிறார், உடையிலே மகரிஷிக் கோலம் தெரிகிறது என்றெல்லாம், வர்ணிப்பதையும், கண்ட நான், ஓகோ! விநோபா மூலமாக, அவர் திரட்டி வரும் மகத்தான செல்வாக்கின் மூலமாக இவர்கள், தமது இழந்த செல்வாக்கை மீட்டிடவும், இவர்களைக் கப்பிக்கொண்டு வரும் இருட்டினை ஓட்டிடவும் முயற்சிக்கிறார்கள், இந்நிலையில், நாம் குறுக்கிட்டு அவர்கள் ஆசை குலையவும், நேசம் முறியவும் காரணமாக இருக்க வேண்டாம், என்று கருதினேன். ஆனால் விநோபா அந்தக் காரியத்துக்காகத் தம்மை ஒப்படைத்தவரல்ல, அவருடைய உள்ளத் தூய்மை 'குத்தகை'ப் பொருளல்ல என்பதைப் பூதான இயக்கத்தில் ஈடுபாடு கொண்டுள்ள நண்பர்கள் என்னிடம் கூறினர்.

சிறப்பாக தோழர் ஜகன்னாதன் என் தயக்கம்போகப் பெரிதும் பயன்பட்டார்.

அடக்கமும் அன்பும், ஆற்றலைக் கூட மறைத்துக் காட்டும் பண்பும் கொண்டு, ஆழ்ந்த நம்பிக்கையுடன் பூதான இயக்கத்தில் ஈடுபட்டுப் பணியாற்றி வருபவர் நண்பர் ஜகன்னாதன். இரண்டு மூன்று ஆண்டுகளாகவே எனக்கு அறிமுகமானவர்; வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் நமது கழகத் தோழர்களிடம், பூதான இயக்கம் பற்றிக் கலந்து பேசுபவர்; நமது பொதுச் செயலாளரிடமும் தோழர் சம்பத்திடமும் பல முறை இப்பிரச்சினை குறித்துப் பேசியுமிருக்கிறார். நான் விநோபாவைச் சந்தித்ததற்குப் பெரும் காரணமாக அமைந்தவர் அவரே; அங்கு சென்ற பிறகு எனக்குற்ற நண்பர்கள் வேறு பலரும் அங்கு இருக்கக் கண்டு மகிழ்ந்தேன்.

காஞ்சிபுரத்தில் சர்வோதய மாநாடு நடைபெறுகிறது—அந்தச் சமயம், விநோபாவைக் காண வேண்டும்—என்று நண்பர் ஜகன்னாதன் கூறினார்—எனக்கும் விருப்பம் எழுந்தது.

சம்மேளனமும், நமது மாநாடும், ஏறத்தாழ ஒரு கால அளவுக்குள்ளாகவே இருந்தது. எனவே, நான் சம்மேளனத்தில் கலந்துகொள்ள இயலவில்லை; அது எனக்கு முதலில் வருத்தமாகத்தான் இருந்தது என்றாலும், சம்மேளனம் குறித்த நடவடிக்கைகளைச் சேதிகளாகக் கண்ட பிறகு, நான் போகாமலிருந்தது, எவ்வளவோ பேருக்கு மனநிம்மதியாக இருந்திருக்குமல்லவா என்பதனால் மகிழ்ச்சி பிறந்தது; சென்றிருந்தால், நான் ஓரளவு மனச்சங்கடத்தைச் சமாளித்துக் கொண்டுதான் அங்கு இருந்திருக்க முடியும். அத்தகைய சூழ்நிலை அங்கு உருவாக்கப்பட்டது.

மனிதன் உள்ளத்திலே பேய்க்குணம் புகுந்து, உலகம் கெட்டுவிட்டது,

அவா புகுந்தது; அழுக்காறு குடைந்தது; பகை புகைகிறது; பாபம் பெருகுகிறது,

சுயநலம், சுரண்டிக் கொழுத்தல் சுகபோக நாட்டம் எனும் தீயசக்திகள், மனிதனை மிருகமாக்கிவிட்டன,

எதனையும் தன் ஆதிக்கக் கருவியாக்கிக்கொள்ளத் துணிந்துவிட்டனர், இதனால் துன்பம் பெருகிற்று, தூய்மை அருகிப்போய்விட்டது—

விநோபாவின் கருத்து இவை.

சம்மேளனத்துக்குத் 'தூண்களாக'க் காட்சி தந்தவர்களிலே பலர், இத்தனைக்கும் பிறப்பிடம், இருப்பிடம்! இதை நான் அங்கு சென்று கண்டு, எங்ஙனம் வெளி

யிடாமல் இருந்திட இயலும்; வெளியிட்டிருந்தால், சபையின் வனப்பு எப்படிக் குலையாதிருக்கமுடியும்!

சென்று வந்தவர்களும், பூதான இயக்கத்திலும், வினோபாவின் அப்பழுக்கற்ற தொண்டிலும் மனது இலயித்திருப்பவர்களுமே, சர்வோதய சம்மேளனத்தில் கண்ட காட்சியைக் கண்ணீருடன் கூறுகிறார்கள்.

'புது வாழ்வு' என்றோர் இதழ்— இதோ என் எதிரில் — சேலத்திலிருந்து வெளிவரும் முற்போக்கு இதழ் — அதிலே, நான் காண்பது, தம்பி, உன் மூலம், நாடு காணட்டும்:

> "சென்ற மாதம் இறுதியில் காஞ்சிமா நகரில் 8-வது சர்வோதய சம்மேளனம வெகு சிறபபாக நடைபெற்றது, இமயத்திலிருந்து குமரி வரை, ஏன், சிலோன், ஜப்பான், அமெரிக்கா, மற்றும் பல ஐரோப்பிய நாடுகளினின்றும் ஆயிரமாயிரம பிரதிநிதிகளும பார்வையாளர்களும் விஜயம் செய்து சம்மேளனத்தைச் சிறபபித்தாகள்.
>
> **ஆனால் அவர்கள்தாம் எதிர்பார்த்தபடி மன நிறைவுகொண்ட மனதிேனுடு திரும்பினரா? இல்லையென்றே சொல்ல வேண்டும். ஏன்? காங்கிரஸ் கட்சியின் கண்மூடிச் செயல் ஆளும் கட்சியின் அநாகரீக தர்பார், நல்லவர்களின் உள்ளங்களையெல்லாம் வதைத்துவிட்டது."**

தம்பி, வினோபா பூதானம் கேட்கிறார் — அவருடைய தூய்மைமை கண்டு அளிக்கிறார்கள் — ஆனால் ஆளும் கட்சியோ, அவரிடம் **இரத்ததானம் கேட்கிறது!** உண்மை ஊழியர்களுக்கு வேதனை உண்டாகிறது, ஆனால் அதற்காக, ஆளும் கட்சியினர், இந்தப் பொன்னான வாய்ப்பையா இழந்துவிடுவார்கள்! அவர்கள் பாபம், ஆகாவழியில் ஆட்சி நடத்துவதால், மககளை அணுகவே அஞ்சிக்கொண்டு இருக்கிறார்கள. அருள் நெறியினர், அண்ணல் வினோபா என்பதற்காக ஆயிரக் கணக்கிலே அவருக்கு அஞ்சலி செலுத்த மக்கள வருகிறார்கள் எனறு அறிந்ததும், அவர் நிழலில் பதுங்கிக்கொண்டு மக்களிடம் சென்று, புன்னகை செய்தும், புண்யவான் என்று பேசியும், மதிப்புப் பெறலாமா என்று முயறசிககிறார்கள்,

அவர்களாக, மக்களைச் சந்திக்க, எத்தனையோ திறப்பு விழாக்கள், ஆண்டு விழாக்கள், பாராட்டு விழாக்கள் நடத்திப் பார்க்கின்றனர்— அலுத்துப்போன அதிகாரிகளும், ஆயாசப்படும் கனதனவான்களும்மட்டுமே காட்சி தருகின்றனர் — மக்களோ, அங்காடியில் நின்றபடி கெக்கலி செய்கின்றனர். இந்த நிலை கண்டு நொந்துபோயிருப்பவர்களுக்கு, வினோபாவின் விஜயத்தைச் சர்வரோக நிவாரணியாக்கிக்கொள்ளலாம் என்ற அற்ப ஆசை ஏற்படுகிறது. ஆகவேதான், தம்பி,

> **"வினோபா பிரார்த்தனையில் விளம்பரம் பெறும் நோக்கத்துடன் காங்கிரஸ்காரர்கள் அவர் மேடைமீது நிரம்பத் துவங்கிவிட்டார்கள் பல்லாயிரக்கணக்கான மக்களிடம் தங்களை விளம்பரப்படுத்திக்கொள்வது செலவற்ற தேர்தல் வேலை என்று கருதிவிட்டார்கள்!"**

என்று அந்த ஏடு எழுதுகிறது.

எனக்கு எடுத்துச்சொல்லக்கூட வெட்கமாக இருக்கிறது, இவ்வளவு கூச்சம் விட்டா, பெருந்தலைவர்கள் நடந்துகொள்வார்களௌனறு தோன்றுகிறது. ஆனால், அந்த இதழ், திட்டவட்டமாகக் கூறுகிறது; வினோபா கூட்டத்தைத் தமது விளமபரத்துக்குக் காங்கிரஸ்காரர் பயன்படுத்திக்கொண்டதால் ஏற்பட்ட அவலட்சணத்தை.

> "இதனால் வினோபாவுக்கே மேடையில் இடம் இல்லை. அவர்பாடு சங்கடமாகிவிட்டது. எனவே சர்வோதய ஊழியர்கள் கூடி, பிரார்த்தனையின்போது, வினோபாஜி, அவரது மொழி பெயர்ப்பாளர் ஆகியோரைத் தவிர வேறு யாரும் மேடைமீது அமரக்கூடாது எனறு முடிவு செய்தார்கள.
>
> **ஆனால் விளம்பரத்திற்கே வாழும் காமராஜர் இதனைப் பொருட்படுத்தாது, மேடையின்மீது வந்து ஆனந்தமாக அமர்ந்தார்.**
>
> ஏற்கனவே செய்யப்பட்ட முடிவுக்கு மாறாக நடந்ததைக் காண சர்வோதய ஊழியர்கள் உள்ளம் நொந்தார்கள, உத்தமத் தோழர், ஒப்பற்ற வீரர், தமிழ்நாடு மாணவ பகுதி பூமிதானக் கமிட்டி கன்வீனர் R, K. கிருஷ்ணமூர்த்தி மெத்தவும் துடித்து காமராஜரை அணுகி, மேடையைவிட்டுக் கீழே இறங்கு என்று கர்ஜித்தார். காமராஜர் அதனைப் பொருட்படுத்தாமல் அலட்சியமாகப் பேசினார். முடிவில் அநீதியை அப்பால் அகற்ற தன்னால் முடியாது என அறிந்த கிருஷ்ணமூர்த்தி அவ்விடத்தைவிட்டு அகன்றார்"

தம்பி! காமராஜர் குறித்து இவ்வளவு விஷயம் வெளியிடும இந்த 'ஏடு'—நமது முகாம் அல்ல — சர்வோதய சம்மேளனம் வெற்றிபெறுவதற்காகப் பணியாற்றிடும் நண்பர் குழாம்—நினைவிருக்கட்டும்,

மனம் அவ்வளவு புழுங்கிடும் அளவுக்கு, சர்வோதய சம்மேளனத்தைக் காங்கிரஸ்மாநாடு ஆக்கியிருக்கிறார்கள்.

காங்கிரஸ் மாநாடு ஆக மாறியது கூட அல்ல, அந்தச் சம்மேளனம, போலீஸ் மாநாடாகிவிட்டதே என்று துளைத்திடும் துக்கத்தை ஏடு வெளியிடுகிறது; படித்துக் காட்டு, புனித இடங்களை நான் பாழ்படுத்திவிடுகிறேன் என்று புகார் கூறிடும் நண்பர்களுக்கு.

> "இராஜன் பாபு வந்தாரோ இல்லையோ, சம்மேளனம், ஏன், காஞ்சி வட்டாரமே போலீஸ் இராஜ்யம் ஆகிவிட்டது! ஆயிரக்கணக்கான மலபார் போலீசும் இதர போலீசும் குவிந்துவிட்டனர். எங்கும் போலீஸ்மயம்! அது போலீஸ் மகாநாடாக மாறிவிட்டது. **எல்லோரும் சமம் என்பதை நிலைநாட்ட எழுந்த அந்த மகாநாட்டிற்கு ராஷ்டிரபதி ராஜன் பாபு வந்ததற்காக பல இலட்சங்கள் செலவு!**
>
> ஒரு மனிதரைக் காப்பாற்ற ஆயிரமாயிரம் போலீஸ். மழை காரணமாக பல குடிசைகளில் நீர் நிரம்பிவிட்டதால் பல பிரதிநிதிகள வெட்ட வெளிகளில் தங்கினார்கள். தொண்டு கிழங்களும், தாய்மார்களும், தரையில் புரண்டார்கள். மகரிஷி வினோபா, ஜெயப்பிரகாஸ்; ஆகியோருக்குக்கூட எளிய குடிசைகள் தான்.

ஆனால் அதே சம்மேளனத்திற்கு வந்த ஒரு மனிதர் இராஜன் பாபு இரண்டு நாட்கள் தங்க பத்தாயிரம் ரூபாய் செலவில் புதியதோர் நவநாகரிக மாளிகை நிர்மாணிக்கப்பட்டது. எத்தனையோ நூறு நூறு உள்நாடு, அயல்நாட்டு மக்கள் வெப்பத்தைப் பொருட்படுத்தாது சம்மேளனத்தில் தங்கினார்கள். ஆனால் அந்த ஒரு மனிதருக்குப பல ஆயிரம் ரூபாய் செலவில் மித உஷ்ண அறைகள் அமைக்கப்பட்டன!

ஓரம் ஓரம் என்று போலீஸ் பொதுமக்களுக்கு தெருஓர சாக்கடைகளைக் காட்டினர்.

பலர் சாக்கடைகளில் விழுந்தனர்.

சமுதாயத்தில் மூண்டுவிட்ட சீர்கேடுகளை நீக்க சம்மேளனம் கூடுகிறது—உண்மை ஊழியர்கள் உள்ளம் வெதும்பி, அங்கு காணப்பட்ட சீர்கேடான நிலையைக் கூறி வருந்துகிறார்கள். மேலும் எழுதுகிறது, 'புது வாழ்வு':

> "அடுத்தது காங்கிரஸ் தலைவர் தேபர். இம்மனிதர் வழக்கப்படி தமது சின்னத்தனத்தைக் காட்டச் சிறிதும் தவறவில்லை. ஒரு சர்க்கஸ் கம்பெனியைப்போல் பரிவாரங்கள் புடைசூழ வந்தார்"—

தம்பி, இவ்வளவு கொதிப்பு' 'புதுவாழ்வு' இதழ் கட்டுரையாளருக்கு ஏற்படும்விதமாகச் சூழ்நிலை இருந்தது என்றால், நான் அங்கு சென்றிருந்தால் மனம் என்ன பாடுபடும் என்பதையும், புது வாழ்வு கட்டுரையாளர் கூறுவதிலே பத்திலொன்று நான் கூறிட நேரிட்டால் எவ்வளவு பதறிப்போய், பாவீ! பாதகா! என்று பழித்திருப்பார்கள் என்பதையும் எண்ணிப் பார்.

**"ஒன்றுமட்டும் சம்மேளனத்தில் தெளிவாகிவிட்டது. காங்கிரஸ்காரர்கள் கட்சி விளம்பரத்திற்குத்தான் பூமிதானத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான் அது!"**

உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும், சொந்தம் கொண்டாடிக்கொண்டும் சம்மேளனத்தில் கலந்துகொண்ட ஒருவர், அங்கு காட்சிகளைக் கண்ட பிறகு அளித்திடும் தீர்ப்பு இது.

எனக்கு, முன்கூட்டியே நிலைமை இப்படித்தான் இருக்கும் என்று மனதில்பட்டது— ஆனால் அதனை நண்பர் ஜகன்னாதனிடம் எடுத்துச் சொல்வது கண்ணியக் குறைவாகத் தென்படும் என்று எண்ணினேன்.

விளம்பரம் பெறக் காங்கிரஸ்காரர்கள், வினோபாவின் ஒளியைப் பயன்படுத்திக்கொள்வதுகூட ஒரு புறம் இருக்கட்டும்— அதிலே அவர்கள் வெற்றி பெறப்போவதுமில்லை —வினோபா யுதனை அனுமதிக்கவும் போவதில்லை என்பது எனக்குப் புரியத்தான் செய்கிறது— வேறோர் வேடிக்கையைப் பார், தம்பி, வந்துள்ள பெரியவரிடம் உபதேசம் கேட்போம், உயர்நெறி அறிவோம், உள்ளத்துக்குச் சாந்தி தேடிக்கொள்வோம், ஏறிவிட்ட கறைகளைப் போக்கிக்கொள்வோம் என்று துளியும் அக்கரை காட்டாமல், காங்கிரஸ்காரர்கள், வினோபாவைத் தூண்டிவிட்டு, நம்மைத் தாக்கச் சொல்கிறார்கள்.

இந்த அரும்பணியைத் திறம்படச் செய்ய முயன்றிருக்கிறார், ஆச்சாரியார்!

"ஆச்சார்ய வினோபா அவர்களே! இங்கு, தமிழ் நாட்டிலே, நாஸ்தீகம் தலைவிரித்தாடுகிறது. அரக்கர் கூட்டம் பெருத்துவிட்டது! அதிலும் காஞ்சிபுரத்தில் அது அதிகம். தாங்கள் இதனை ஒழிக்கவேண்டும்" — என்று, ஆச்சாரியார் பேசியிருக்கிறார். தம்பி! எனக்குக் கோபம் வரவில்லை— சிரிப்புத்தான் வருகிறது!

ஆச்சாரியார், பாபம், மாமேதை என்று கொண்டாடப்படுகிறார்.

ஓயாமல் பேசுகிறார், ஒய்யாரமாக எழுதுகிறார்.

இராமனை அழைக்கிறார் அரி பரந்தாமனை பஜிக்கிறார்.

ஆரிய குலக்கொழுந்தே! அஞ்சற்க! அயர்ந்துபோய் இருந்துவிடாதீர்! விழித்தெழுக! வீழ்த்துக விரோதிகளை!—என்கிறார்,

இவ்வளவும், பயன்படவில்லை— என் பாணங்களை ஏவி ஏவிப் பார்க்கிறேன், அரக்கர் தொலையவில்லை, வினோபா அவர்களே! தாங்கள் தமது சக்தியால், இந்த அரக்கர்களைச் சம்ஹரிக்க வேண்டும் — என்று கேட்கும் போக்கு, சிரிப்பாகத்தான் இருக்கிறது. எனக்கு மட்டுமா, தம்பி வினோபா கூடத்தான் உள்ளூரச் சிரித்திருக்கிறார்!

மெத்த அலுத்து வந்திருக்கிறாள் அத்தை!

குத்திப் புடைக்கச் சொல்லு நெல்லை—என்று குக்கிராமத்துப் பழமொழி கூறுவார்கள்.

வினோபா, தமிழகத்தில் பூதானத்தை வெற்றிபெறச் செய்வதற்காக, பல்லாயிரக் கணக்கிலே 'பாத யாத்திரை' செய்துகொண்டு வருகிறார், எவரெவர் எவ்வெவ் வகையான உதவி தருகிறீர்கள், என் பணி, உமது பணியாகும், உத்தமப பணியாகும் என்று கூறி வருகிறார், வந்துள்ள அந்தப் பெரியவருக்கு, அன்புரையும் ஆதரவும் தந்து, இன்னின்ன வகையிலே, தாங்கள் மேற்கொண்டுள்ள மகத்தான தொண்டுக்கு நான் பேருதவி புரிவேன் என்று கூறிடாமல், வந்ததே வந்தீர், தங்கள் வல்லமையைக்கொண்டு, இந்த அரக்கர் கூட்டத்தைத் தொலைத்துக் கட்டும்' என்று பேசுவது! எவ்வளவு இரக்கமற்ற மனம்! இலஜ்ஜை கெட்டத்தனம்! நப்பாசை!

வினோபா, இதனை மிக நன்றாகப் புரிந்துகொண்டு, சுடச் சுடக் கொடுக்கிறார்—சரி, வந்தவேலை சரியில்லைபோலும் என்று நொந்து கொண்டு செல்கிறார் ஆச்சாரியார்.

சம்மேளனம் கூட்டப்பட்டதற்கும், 'சம்ஹாரமூர்த்தி'யாகும்படி வினோபாவுக்கு ஆச்சாரியார் தூபமிடுவதற்கும் என்ன சம்பந்தம்? அதே சம்மேளனத்தில் வேறு யாரேனும், சம்பந்தப்படாத பொருள்பற்றிப் பேசினால் எத்தனை சலசலப்பு ஏற்படும். அத்தகைய சூழ்நிலை காணப்பட்ட சம்மேளன கூடத்திலே நான் வினோபாவைச் சந்திக்காதது, நல்லதுதான் என்பதை நண்பர் ஜகன்னாதன்கூட இப்போது ஒப்புக்கொள்வார் என்று எண்ணுகிறேன். நான் வினோபாவைச் சந்தித்த இடம்— இவ்விதமான தூபதீப நைவேத்தியங்களற்ற, தூண்டிவிடும் தூயவர்களோ கிண்டிவிடும் கனவான்களோ இல்லாத சிற்றூர்.

தம்மனூர் எனும் சிச்சிற்றூர், எங்கள் காஞ்சிபுரத்திலிருந்து பத்து கல் தொலைவில் உள்ளது — பல காலமாகத் தண்ணீரற்றுப்போயுள்ள பாலாறு கடந்து இங்கு

செல்லவேண்டும் — ஆறு பர்லாங்குக்குமேல் ஆறு. சாதாரண மோட்டார் செல்லாது—ஜீப் மோட்டாரின் துணைகொண்டுதான ஆற்றினைக் கடக்கமுடியும். முன்னாள் பகலே இந்தச் சங்கடத்தை அறிந்த நண்பர் ஜகன்னாதன், பூமிதானக் கமிட்டியாருடைய ஜீப்பை அனுப்பிவைப்பதாகக் கூறினார்; அதனபடியே ஜீப் வந்தது; உடன்வந்த பூதான இயக்கத் தொண்டர்கள, 'பாபா'வின் கருத்துக்களை, குறிப்பாக ஆஸ்திக நாஸ்திகம்பற்றி அவர் வெளியிடும் கருத்துக்களை எனக்கு எடுத்துரைத்தனர்.

நான் தம்மனூர் சென்று வினோபாவைக் கண்டபோது, உண்மையிலேயே, உருக்கமானதோர் காட்சியாகவே தென்பட்டது.

அந்தத் தொகுதியின் உறுப்பினர்கூட அந்தச் சிற்றூருக்குச் செல்வதிலே சிரமம் கொள்ளக்கூடும்—எங்கோ நெடுந்தொலைவில் இருப்பவர்— இந்த குக்கிராமத்தில் வந்து தங்கி, மக்களைக் கண்டு பேசி, மகத்தான பணிபுரிகிறாரல்லவா, தூய்மையான தொண்டு என்றால் இஃதன்றோ என்று எண்ணாமலிருக்கமுடியுமா! அதிலும், வினோபாவை நான் கண்டபோது இருந்த சூழ்நிலை எனக்குப் பெரிதும், விசாரமே தந்தது.

மொகலாய சாம்ராஜ்யாதிபதிகள் கட்டிய செங்கோட்டையிலே கொடி பறக்கிறது.

வெள்ளை ஏகாதிபத்யவாதிகள் கட்டிய மாளிகையில் வீற்றிருந்து அரசோச்சுகிறார்கள், வினோபாவின் உழைப்பினைப் பெற்று உயர்வு அடைந்த காங்கிரஸ்காரர்கள்.

மாலை தவறாமல், தோட்டக் கச்சேரிகளும், நடன விழாக்களும் நடக்கின்றன—டில்லியிலும், மாகாணத் தலைநகர்களிலும்!

விருந்தும் வைபவமும் தெகிட்டும் அளவுக்கு நடைபெற்ற வண்ணமிருக்கிறது தர்பார் நடாத்துவோருக்கு.

இங்கு, தம்மனூரில், ஒரு சிறு பஜனைக் கோவிலில், (ஓலைப்படுதா முகப்பில் அமைக்கப்பட்டநிலையில், முழங்காலுக்கு மேல் வேட்டி கட்டிக்கொண்ட முதியவர், உட்கார்ந்துகொண்டிருக்கிறார்! அவர் காலடியில் ஏறக்குறைய ஐம்பது இலட்சம் ஏக்கர் தானநிலம் கிடக்கிறது! ஒருதுளி 'தர்பார்மினுக்கு' இல்லை, எளிமை இனிமை தருகிறது, தூய்மை பளிச்சிடுகிறது, இம்மட்டோ, தனிமையும தெரியத்தான் செய்கிறது!

நான் சில விநாடி ஏதும் பேசாமல், வினோபாவைப் பார்த்தபடி, எதிரே அமர்ந்திருந்தேன்—என்னை அறிமுகப்படுத்திய ஜகன்னாதன், அருகே அமர்ந்தார்—பத்து இருபதுபேர்கள், உரையாடல் நடைபெறும் என்றறிந்து உடன் அமர்ந்தனர்.

களைப்பா? சலிப்பா? மனதிலே ஆழ்ந்ததோர் விவாதமா? அல்லது ஆழப் பதிந்துவிட்ட தன்னடக்கமா? காரணம என்ன இவர் முகத்திலே, கவலைக் கோடுகள் தெரிந்திட! — என்று நான் எண்ணிக்கொண்டேன். ஐம்பது இலட்சம் ஏக்கர் நிலத்தை— அவற்றிலே பயனபடாதவை இருக்கத்தான் செய்கின்றன — ஒருவர் — சர்க்காரின் துணையின்றி, சாந்தம், சீலம், எனும் அருங் குணத்தின் துணைகொண்டு மட்டுமே, தானமாகப பெற்றார் என்றால், அது சாமான்யமான விஷயமல்ல!! மகத்தான வெற்றி!

குமாரிகளும் கோகிலங்களும் ஆடிப் பாட, கோலோச்சும் கவர்னர் தலைமை தாங்க, திக்கெட்டும் சென்று கலெக்டர்கள் திரட்ட, பணம் ஏதேனும் ஓர் நிதிக்கு, மொத்தமாக ஒரு பத்தாயிரம் கிடைத்துவிட்டால், 'ராஜ நடை' போட்டுக்கொண்டு சிமமம்போல் கர்ஜிக்கும், மந்திரிகளைப் பார்க்கிறோம — இதோ ஓர் முதியவர்— வரப்புச் சண்டைக்குத் தலையைச் சீவிக்கொள்ளும் அளவுக்கு உடைமை உணர்ச்சி உள்ள நாட்டிலே, — காலத்திலே—50-இலட்சம் ஏக்கர் நிலத்தைத் தானமாகப் பெற்று, இத்துணை தன்னடக்கத்துடன் அமர்ந்திருக்கிறாரே, என்று ஆச்சரியப்பட்டேன்!

முனிபுங்கவர் — மகரிஷி—என்றெல்லாம், அவரைப் புகழ்வதாக எண்ணிக்கொண்டு அவரிடம் உறவுகொண்டாடி, ஊராளும் வாய்ப்பினை மீண்டும் பெறத் துடிப்போர் கூறுகின்றனர். முனிவர்களும், மகரிஷிகளும், உடைமை உணர்ச்சி கொண்டோரிடம் —'தானம்' பெற்றிருக்கிறார்கள்— கோதானம்—பூதானம் — சொர்ண தானம்—பலப்பல! கன்னியா தானம் கூடத்தான்!! ஆனால் யாருக்காக? ஏழை எளியோருக்காகவா!! இல்லை! வாமன அவதாரமேகூட, மாவலியிடம் 'பூதானம்' பெற்றது, ஏழை எளியோருக்குப் பங்கிட்டுத்தர அல்லவே! வினோபா, மகரிஷி அல்ல—முனிபுங்கவர் அல்ல! எனவேதான், காட்டிலே சென்று ஊசிமுனைமீது நின்று தவம் செய்துகொண்டில்லை. கால் கடுக்கக்கடுக்க, காடு மலை வனம் வனாந்திரங்களைக் கடந்து, ஏழைக்கு இதம் தேடுவேன், இயலாதாருக்கு உதவி பெறுவேன், இரும்பு இதயத்தையும் இளகச் செய்வேன, என்று கூறிக்கொண்டு தொண்டாற்றுகிறார்.

கூப்பிட்ட குரலுக்கு பகவான் ஓடோடி வருவார், என்ற 'அற்புதம்' நடத்திக் காட்டிவிட்டு, 'தானம்' கேட்கும் மகரிஷி அல்ல வினோபா. ஏழையின் கண்ணீரைக் காண்கிறார், அதனைத் துடைத்திடக் காந்தியார் சமைத்தளித்த காங்கிரஸ் அந்தக் காரியத்தைச் செய்யாமல், பதவிப் பன்னீரில் குளித்துக் களித்திடக் காண்கிறார்; பதறிப்போய், அந்தக் கூடாரத்தில் தங்காமல், கோல்கொண்டோர் செய்திட மறந்தகாரியத்தை குணத்தால் சாதிக்க முயல்கிறார்.

குடிஅரசுத் தலைவரிலிருந்து குட்டி மந்திரிகள்வரையிலே, அவருக்கு நன்றாகத் தெரியும்.

அவர்களெல்லாம், என்னென்ன செய்யவேண்டும என்று எடுத்துக் கூறிட அவருக்கு உரிமையும இருக்கிறது.

எனினும், அவர்கள் எந்த நிலைமைக்குச் சென்றுவிட்டனர் என்பதை நன்கு அறிந்ததாலும், அவர்களைத் திருத்துவதோ, தன் வழிக்குக் கொண்டுவருவதோ இயலாத காரியம் என்று உணருவதாலும், 'சர்வோதயம்' எனும் தனி இயக்கம் கண்டு, பணியாற்றுகிறார்.

**காங்கிரஸ், இனி மக்களுக்குப் பயன்படாது என்பதைத் திட்டவட்டமாக விளக்க ஏதேனும் ஓர் எடுத்துக்காட்டு தேவை என்றால், நாம், தம்பி, வினோபாவின் தொண்டினைக் காட்டலாம்.**

**மகன், தாசில் வேலை பார்க்கிறான்—தகப்பனார் வாழைத் தோட்டத்திலோ வயலிலோ வாட்டத்துடன் வேலை செய்கிறார் என்றால் பொருள் என்ன? புரியவில்லையா!** வினோபாவிடம் நான் கண்ட விசாரத்துக்குச் காரணம் இதுதானோ—நானறியேன்.

நண்பர் ஜகன்னாதன், என்னை அறிமுகப்படுத்தியானதும், பேசினோம்; நினைவிலே உள்ளபடி கீழே குறித்திருக்கிறேன்.

உரையாடலின்போது, வினோபா தமிழ் பேசுவார் என்று நான் பெரிதும் எண்ணினேன்—அவர் இந்தியில் பேசினார் — மொழிபெயர்ப்பாளர் துணையில்தான், உரையாடல் நடைபெற்றது.

வினோபா:- உங்கள் கழகத்தின் நோக்கம்...?

நான்:- நாங்கள், திராவிடநாடு கேட்கிறோம்— அறிவீர்களே.

வினோபா:- உங்கள் கழகத்தில் யார் வேண்டுமானாலும் சேரலாமல்லவா.....உதாரணமாக நான் சேரவிரும்பினால் .........?

நான்:- நாங்கள், திராவிட நாடு சம்பந்தமாகத்தான் கழகம் அமைத்திருக்கிறோம்; அகில இந்தியக் கட்சி அல்லவே. எனவே இயல்பாகவே, திராவிட நாட்டிலுள்ளோர்தான் உறுப்பினராகச் சேர விரும்புவர்.

வினோபா:- திராவிடநாடு என்றால், தனி நாடாகவே வா...?

நான்:- ஆமாம். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆகிய நான்கு மொழிவழி அரசுகள் அமைத்து, பிறகு, அவைகளின் கூட்டாட்சியாகத் திராவிட நாடு ஏற்படுத்துவது...

வினோபா:- மத்ய சர்க்காருக்கு என்ன அதிகாரம்?

நான்:- மத்ய சர்க்காரின் கீழ் இருக்கும் நிலைமையே எழாது. தேவைப்படும்போது வெளி நாட்டு விவகாரம் குறித்து, கலந்துபேசலாம், கூடிப் பணியாற்றலாம்...

வினோபா:- அப்படி என்றால், தனி நாடு... அதாவது தனி அரசு ...சிலோன்போல...

நான்:- ஆமாம்...

வினோபா:- பாகிஸ்தான் போல் ஆகிவிடும்...

நான்:- நியாயமான கோரிக்கை மறுக்கப்பட்டால், பாகிஸ்தான் போல்தான் ஆகிவிடும் ......

வினோபா:- தனி நாடு என்றால் தனி பட்டாளம்கூட இருக் இருக்கும்......

நான்:- ஆமாம், தனிப்படை இருக்கும்......

வினோபா:- தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் எல்லாம் ஒன்றாக இருக்குமா......

நான்:- எங்களுக்கு நம்பிக்கை உண்டு — ஏனெனில் நாலு மொழிகளும் ஒரே மூலம் கொண்டவை.

வினோபா:- நான் நாலு மாதம் ஆந்திரத்தில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். ஆந்திரர்கள் தமிழர்களுடன் ஒன்று கூடி அரசு அமைக்க விரும்பும் எண்ணம இருப்பதாகத் தெரியவில்லை.

நான்:- இப்போதைக்கு அவ்விதமான எண்ணம் அங்கு இருக்கலாம். தாங்கள் ஆந்திரம் சென்ற சமயம, ஆந்திரர்கள் தமிழர்களுடன் ஒரே அரசில் இருந்ததால், தங்கள் வளர்ச்சி தடைப்பட்டது என்று எண்ணி கசப்பு அடைந்திருக்கும் நேரமாக இருந்தது. தனியாகிவிட்டார்கள். இபபோது அவர்களுக்கும் மத்திய சர்க்காருக்குமதான் தொடர்பு. இப்போதும் தங்களுக்கு வளர்ச்சி இல்லை என்றால், அதற்குக் காரணம் தமிழரல்ல, மத்ய சர்க்கார்தான் என்று அறிந்துகொள்வார்கள். இப்போதே மைசூர், ஆந்திரம், கேரளம் ஆகிய பகுதிகளில் 5-ஆண்டுத் திட்டங்களில் சரியான முறையில் தமக்குக் கிடைக்கவேண்டியது கிடைக்கவில்லை என்று எண்ணுகிறார்கள்.

வினோபா:- மத்ய சர்க்கார் அநீதியாக நடப்பதால்தானே பிரிந்துபோக விரும்புகிறீர்கள்? நீதியாக நடந்துகொண்டால்?

நான்,- அப்படிப் பார்ப்பதைவிட, இதுபோல் எண்ணக் கேட்டுககொள்கிறேன். மத்ய சர்க்கார் அநீதியாக நடப்பதால் கசப்படைகிறோம் என்று கூறுவதைவிட, மத்திய சர்க்கார் என்று ஒன்று இருந்தால், அநீதிதான் நடக்கும் என்று கொள்ளவேண்டுகிறேன்...மேலும் நீதியாக நடக்கக்கூடிய கடைசி தலை முறையே இப்போது வடநாட்டில் உள்ளது என்று நினைக்கிறோம். இனி வரக்கூடிய தலைமுறையில், அதிகமான அநீதிதான் இருக்கும்.

வினோபா:- நீங்கள் நாலு மொழி பிரதேசத்தையும் கூட்டாட்சியாக்கியான பிறகு உங்கள் ஆட்சியிலே அதிருப்தி யாருக்கேனும் எந்தப் பகுதிக்கேனும் ஏற்பட்டால், என்ன செய்வீர்கள்?

நான்:- பிரிந்துபோக உரிமை தருகிறோம்.

வினோபா:- தனி நாடு ஆகும்.

நான்:- ஆகலாம்.

வினோபா:- அதாவது, அன்புடன் ஒன்றாக இருக்கலாம், இல்லையானால், பிரிந்து போகவேண்டியது... அதுதானே.

## வருந்துகிறோம்

நமது அ. பொன்னம்பலனார் அவர்களின் அருமைத் தந்தையார் திரு. அப்புலிங்கம் அவர்கள் கடந்த 11ந் தேதி விடியற்காலை 5 மணி அளவில் பூவாளூரிலுள்ள தனது இல்லத்தில் காலமானார்கள் எனும் செய்தி அறிய வருந்துகிறோம். நீண்ட நாட்களாகவே, அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள் என்றாலும், தந்தையின்பால் மிக்க அன்புகொண்ட பொன்னம்பலனார் அவர்களுக்கும் அவரது இளவல் தமிழாசிரியர் இளங்கோவன் அவர்களுக்கும் ஆற்றொணாத்துயரைக் கொடுக்கக்கூடிய சம்பவமாகும். எனினும், இயற்கையின் போக்கினை அறிந்த சுயமரியாதைத் தலைவரான அவருக்கு நாம் யாது கூறப்போகிறோம், அவருடைய துன்பத்தில் நாமும் பங்கு ஏற்றுக்கொள்வதுதவிர.

*

காஞ்சீபுரம் கம்யூனிஸ்டுத் தோழர் கே. பக்தவத்சலம் அவர்கள் பொது வாழ்வுத் துறையினர் அனைவராலும் போற்றத்தக்க சிறந்த பண்பாளர்; காஞ்சீபுரம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களின் நெருங்கிய நண்பர். அவர் 31-5-56ல் உயிர் நீத்தார் என்ற செய்தி திகைப்பையும் வருத்தத்தையும் அளிக்கிறது. அவரது அடக்கத்தின் போது எல்லாக் கட்சித் தோழர்களும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்ட காட்சி, காஞ்சீபுரம் ஒப்பற்ற ஒரு சிறந்த பொதுவாழ்வுத் தோழனை இழந்துவிட்டதே என்று கதறிய காட்சியாகும். அவரது இளவல்களுக்கும், குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நான்:- ஆமய்யா! ஒன்று சேர்ந்து இருப்பது என்பது ஒரு விஷயம் — அந்தப் பெயர் கூறிக் கொண்டு ஒன்றின் கீழ் ஒன்று என்ற நிலைமை ஏற்படுவது வேறோர் விஷயமல்லவா.

வினோபா:- இதனை நான் புரிந்து கொண்டேன். இது அஹிம்சா முறையில்தானே நடைபெற வேண்டும். பலாத்காரம் கூடாதல்லவா?

நான்:- பலாத்காரம் கூடாது. பலாத்காரமென்றால், ஆயுத பலாத்கார மட்டுமல்ல, தத்துவ மூலம் பலாத்காரம் புகுத்துவதும் கூடாது.

வினோபா:- அப்படியென்றால்.......

நான்:- தேச ஒற்றுமை, தேசியம் என்ற ஏதேனும தத்துவங்களையே கருவியாக்கிப் பலாத்காரபபடுத்துவது கூடாது.

வினோபா:- அஹிம்சை தானே முறை.

நான்:- ஆமாம்.

வினோபா:- அப்படியானால், தனி நாடு, அதிலே தனியாகப் படையும் இருக்கும் என்றீர்? ஏன், படை?

நான்:- மற்றவர்களிடம் படை இருப்பதால், ஏற்படும் ஆசை தான் அதற்குக் காரணம். தாங்கள் இப்போது, மகாநாட்டிலே இந்திய சர்க்காருக்குக் கூடக் கூறியிருக்கிறீர், படை குறைக்க. பாபு ராஜேந்திர பிரசாத் கூடக் கேட்டுக் கொண்டிருந்தார். பார்ப்போம், அவர்கள் படை குறைப்பதை.

வேறொருவர்:- பாபு ராஜேந்திர பிரசாத் அவ்விதம் கூறவில்லையே.

வினோபா:- இல்லை—நான் கூறிய போது பாபு ராஜேந்திர பிரசாத் இருந்தாரல்லவா...சரி... இதே போல, வங்காளம், மராட்டியம் இவைகளெல்லாம் பிரிந்து போக விரும்பினால்...

நான்:- பிரியலாம், ஆனால் அது அந்த இடத்து மக்களின் உணர்ச்சியைப பொறுத்து இருக்கிறது.

வினோபா:- இப்படி சிறு சிறு நாடுகளாகிவிட்டால், சிறிய நாடுகளைப் பெரிய நாடுகள் பிடித்து அழிக்குமல்லவா...

நான்:- அப்படிக் கூறிவிடுவதற்கில்லை. சிறிய நாடுகளைப் பெரிய நாடுகள் தாக்காதபடி தங்களைப் போன்றவர்கள் உபதேசிக்கும் அஹிம்சை ஆத்ம சக்தி இவைகள் பயனபடுமல்லவா.

வினோபா:- அரசியல் விஷயத்தில் உங்கள் எண்ணம் அறிந்து கொண்டேன். சமுதாய சம்பந்தமாக உங்கள் கட்சி கொள்கை என்ன?

நான்: தங்களுக்குத் திருமூலர் தெரியுமென்று எண்ணுகிறேன். ஒன்றே குலம் ஒருவனே தேவன்—என்பதைத்தான் நாங்கள் கொள்கையாக்கிக்கொள்கிறோம்.

வினோபா:- பொருளாதாரத் திட்டம் என்ன?

நான்:- மனிதனுடைய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, குடி இருக்கும் இடம் ஆகியவை சர்க்காரால் அனைவருக்கும் உறுதி அளிக்கப்படவேண்டும்.

வினோபா:- அதாவது சுரண்டல் கூடாது?

நான்:- அப்படிச் சொல்வதைவிட, நான் வேறு விதமாகக் கூற விரும்புகிறேன், இந்த மூன்று அடிப்படைத் தேவைகளைப் பொறுத்த தொழில்கள், இலாப நோக்கத்துக்காக நடத்தப்படக்கூடாது.

வினோபா:- அப்படியானால் அந்தந்த கிராமத்து நிலம், கிராமச் சொத்தாக இருக்கவேண்டும்.

நான்:- ஆமாம்—அதிலே உழைத்துப் பெறக்கூடியது, அந்தக கிராம மக்களுக்குப் போதுமானதாக இல்லாவிட்டால், சர்க்கார், தேவைபபடும் அளவு தரவேண்டும.

வினோபா:- அதிகமாக இருந்தால் சர்க்கார் எடுதுககொளளலாம்.

நான்:- ஆமாம்.

வினோபா:- (அரியநாயகம் என்பவரைப் பார்த்து) பார்த்தாயா! நான் சொன்னேனே! நம் கொள்கையேதான்-(என்னைப் பார்த்து) கட்சி முறையில், பூமிதான இயக்கத்துக்கு என்ன செய்கிறீர்கள்.

நான்:- கட்சி அடிப்படையில் நாங்கள் ஈடுபடுவதற்கு இல்லை. சங்கடம் உண்டு எங்கள் கட்சி இதில் ஈடுபட்டால், அதனாலேயே வேறு சில கட்சிகளுடைய பகை, தங்கள் இயக்கத்துக்கு ஏற்பட்டு விடக்கூடும்.

ஜகன்னாதன்:- தனிப்பட்ட முறையில் கழகத் தோழர்கள் பல இடங்களில் நமக்குத் துணை இருக்கிறார்கள்.

வினோபா:- நீங்கள் தனிப்பட்ட முறையில் என்ன செய்கிறீர்கள்?

நான்:- தங்கள் நல்ல நோக்கத்தை மக்களுக்குக் கூறுகிறேன். நல்லவர், அவரை ஏமாற்றி விடாதீர்கள் என்றுகூடச் சொல்லிவருகிறேன்.

வினோபா:- தனிப்பட்ட முறையில் ஏதேனும் உதவி செய்கிறீரா?

நான்:- என்னால் ஆன உதவிகளை மக்களுக்குச் செய்து கொண்டிருக்கிறேன்.

வினோபா:- என்னோடு பாத யாத்திரை வாருங்களேன், ஒரு தடவை. பழக்கம் உண்டா?

நான்:- பழக்கமில்லாமலென்ன, வருகிறேன்.

ஜெக:- மறுபடியும் வாருங்கள் பார்க்க.

நான்:- அதற்கென்ன. இன்னும் ஒரு மாதம் கழித்து மறுபடி வந்து பார்க்கிறேன்.

பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வினோபா புறப்பட்டார். நான் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு, சில நிமிஷ நேரம், மற்ற நண்பர்களிடம் அளவளாவிவிட்டு, ஜீப்பின் துணையால் ஆற்றைக்கடந்து ஊர் வந்து சேர்ந்தேன் உள்ளமோ வினோபாவின் முயற்சிபற்றியும், அதற்குத் துணை நிற்பதாகக் கூறிடும் துதி பாடகர்களாலேயே, எந்தெந்த வகையில் குலைக்கப்பட்டு வருகிறது என்பது பற்றியும எண்ணிற்று. அதுபற்றிப் பிறகு.

அன்பன்,

**அண்ணாதுரை.**

# இடியும் மின்னலும்

நமது மக்கள் இடி, மின்னல் இவை உண்டாவதற்கு வேடிக்கையான காரணங்கள் கூறுவார்கள். இந்திரன் மேகங்களைச் சாட்டையால் அடிப்பதினால் மின்னலும், மேகங்கள் ஒன்றோடொன்று உராய்வதால் இடியும் உண்டாவதாகவும், இன்னும் சில அர்த்தமற்றக் காரணங்களும் கூறுவார்கள். ஆனால் விஞ்ஞானம் வேறு காரணங்களைக் கூறுகிறது.

அதாவது மின்சாரத்தினாலேயே இடியும் மின்னலும் உண்டாகின்றனவென்று பிராங்கின்-ஸ்டீன் கண்டுபிடித்தார். இடியும் மின்னலும் எவ்வாறு உண்டாகின்றனவென்றறிய அவர் வெகுநாட்களாக ஆவல்கொண்டிருந்தார். அக்கால விஞ்ஞானம் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆகையால் அவர் தாமாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்.

மின்னல் மின்சாரத்தினால் உண்டாகிறதோவென்று அவருக்கு ஒரு நாள் சந்தேகந் தோன்றியது. அதைச் சோதிக்க அவர் ஒரு விநோதமான சோதனையைக் கையாண்டார் — அதாவது காற்றாடி விட்டார்.

அவர் பெரிய காற்றாடி ஒன்றைச் செய்தார். அதில், நரம்புகளுக்குப் பதிலாக உலோகக்கம்பிகளை அமைத்தார். நூலுக்குப் பதிலாக மெல்லிய உலோகக் கம்பியைக் கட்டினார். காற்றாடியைப் பறக்கவிட்டார்.

காற்றாடி மேலே போய்க்கொண்டிருந்தது. அவரும் கம்பியை விட்டுக்கொண்டிருந்தார். காற்றாடி மேக மண்டலத்தை அடைந்துவிட்டது. உடனே பிராங்கின்ஸ்டீன் காற்றாடிக் கம்பியின் மறுமுனையை மின்சார அளவுக் கருவியுடன் இணைத்தார். அக்கருவி, காற்றாடிக் கம்பியில் மின்சாரம் பாய்வதைக் காட்டியது. அவருடைய சந்தோஷத்திற்கு ஓர் அளவேயில்லை. பிறகுதான் அவர் மனதிற்குச் சாந்தி ஏற்பட்டது; மேகத்தில் மின்சாரம் இருக்கிறது என்பதையும், அதன் விளைவாகத்தான் மின்னலும் இடியும் ஏற்படுகின்றன என்பதையும் உலகறியச் செய்தார். 'நெகடிவ்', 'பாசிடிவ்' என்று மின்சாரத்தில் இரண்டு வகையுண்டு. மேட்டினின்றும் தண்ணீர் பள்ளத்திற்குப் பாய்வதுபோல எப்பொழுதும் மின்சாரம் 'பாசிடி'வினின்றும் 'நெகடி'விற்குப் பாயுந் தன்மையுடையது. சில மேகக் கூட்டங்களில் 'பாசிடிவ்' மின்சாரமும், வேறு சிலவற்றில் 'நெகடிவ்' மின்சாரமும் இருக்கும். அவை ஒன்றினருகே மற்றொன்று வரும்பொழுது, ஒரு மேகப் படலத்தினின்றும் மற்றொரு மேகப் படலத்திற்கு மின்சாரம் பாய்கிறது. அப்பொழுதுதான் கண்ணைப் பறிக்கும் ஒளியும், காதை செவிடுபடச் செய்யும் ஒலியும் உண்டாகின்றன.

நம் வீடுகளில் மின்சார விளக்குகள் எரியும்பொழுதும், 'பாசிடி'வினின்றும் 'நெகடி'விற்கு மின்சாரம் பாய்கிறது. அப்பொழுது அத்தகைய பேரொலியும் ஒளியும் ஏன் தோன்றுவதில்லை என்று கேட்கலாம். அதற்கு வேறு காரணமுண்டு. அங்கு உலோகக் கம்பிகளின் வழியேதான் மின்சாரம் ஓடுகிறது.

காற்று, தன் வழியே மின்சாரத்தைப் பாயவிடுவதில்லை. ஆனால், மின்சாரத்தின் சக்தி அளவு கடந்து போய்விட்டால், காற்றையும் எதிர்த்துக் கொண்டு நெகடிவ்' மின்சாரம் இருக்கும்பொருளிற் பாய்ந்துவிடுகிறது. காற்று மின்சார ஓட்டத்தைதடுக்க முயல்கிறது. அப்பொழுது காற்றுக்கும் மின் சாரத்திற்கும் இடையில் பெரும் 'போர்' நிகழ்கிறது. இடியும் மின்னலும் உண்டாகும் பொழுது மேகமண்டலத்தில் இதுதான் நிகழ்கிறது.

'நெகடிவ்' மின்சாரம் உள்ளமேகமும் 'பாசிடிவ்' மின்சாரமுள்ள மேகமும் அருகே வருகின்றன. அப்பொழுது ஒன்றினின்றும் மற்றொன்றுக்கு மின்சாரம் பாய முயல்கிறது. இப்பாய்ச்சலை அவ்விரண்டு மேகங்களுக்குமிடையில் உள்ள காற்று எதிர்க்கிறது. ஆனால் காற்றின் எதிர்ப்புச் சக்தி அதிகமாக இருப்பதால், காற்றையும் எதிர்த்துக்கொண்டு காற்றின் வழியே மின்சாரம் பாய்கிறது- அப்பொழுதுதான் ஒளியும் உண்டாகின்றன.

இவ்வொளியை மின்னலென்றும், ஒலியை இடியென்றும் நாம் கூறுகிறோம். காற்றின் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்க அதிகரிக்க மின்னலின் ஒளியும் இடியின் ஒலியும் அதிகமாகின்றன. இரண்டு மேகங்களிலும் மின்சார நிலை சமமாகும்வரை, மின்சாரம் பாய்ந்தவுடன் மின்சார ஓட்டம் நின்றுவிடுகிறது. இது ஒரு கணத்தில் நடைபெற்றுவிடுகிறது.

மழைகாலத்தில்தான் மின்னலும் இடியும் அதிகமாக இருக்கின்றன. மற்றைக் காலங்களில் அவ்வளவு அதிகமாக இருப்பதில்லை. இருப்பினும் மழை பெய்யும்பொழுதுதான் அவை ஏற்படும். இதற்குக் காரணம் காற்றிலுள்ள சிறு சிறு நீர்த் திவலைகளேயாகும். ஒரு மேகப் படலத்திற்கு, மின்சாரம் பாய்வதற்கு இவை மிகவும் உதவுகின்றன.

மின்னொளியும் இடியரவமும் ஒரே சமயத்தில் உண்டானபோதிலும் மின்னொளியையே நாம் முதலில் பார்க்கிறோம். சிறது நேரம் கழித்துத்தான் இடியோசை நம் செவியில் படுகிறது. ஒளி—ஒலி ஆகியவற்றின் வேகமே இதற்குக் காரணமாகும்.

ஒளி ஒரு வினாடிக்கு 186,000 மைல் வேகத்தில் செல்லுகிறது. ஆனால், ஒலி சில ஆயிரக் கணக்கான அடிகள் தூரமே செல்கிறது. சில சமயங்களில் மின்னல் மாத்திரம் நம் கண்களில் படுகிறது. இடியோசையை நாம் கேட்பதேயில்லை. மின்னல் ஆகாயத்தில் வெகு தூரத்தில் உண்டக்குமாயின் ஒலி அலைகள் வெகு தூரம் வரவேண்டியிருப்பதால் தேய்வுற்று பூமியை யடையும் பொழுது நம் காது அறிய முடியாத அளவு மெலிந்து விடுகிறது. ஆகையால் தான் இடியோசையை நாம் கேட்பதில்லை.

★

உலகமேதை சர்ச்சிலுடன் தான் பழகிய நாட்களை ஆனந்தத்துடன் வர்ணிக்கிறார், இருபது ஆண்டுகள அவருக்கு இரகசிய மெய்ப்பாதுகாப்பாளராகப் பணியாற்றிய தாம்சன், "சர்ச்சிலின் நிழலாக இருந்த நான்", என்னும் நூலில்! அந்த விபரங்களில் சில: "1939 ஆகஸ்டு 22ந் தேதி எனக்கு ஒரு தந்தி வந்தது. "புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு கிராய்டன் விமான நிலையத்தில் என்னைச் சந்திக்கவும்—சர்ச்சில்". இந்தத் தந்தி எனக்கு வியப்பைத் தந்தது. ஏனெனில் நான் ஸ்காட்லாந்து யார்டில் துப்பறியும் இன்ஸ்பெக்டராக இல்லை. ஓய்வுபெற்று மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. எனினும், தந்தியைக் கண்டுக் கிளம்பிச் சென்றேன். என்னைக் கண்டதும், "வா! வேலையை ஏற்றுக்கொள்", என்று சொல்லிவிட்டு விமானத்தில் ஏறிக்கொண்டார். அதற்குக் கொஞ்ச நாட்களுக்கெல்லாம், இரண்டாவது உலகப் போரில் பிரிட்டன் ஈடுபடவேண்டி நேர்ந்தது. 1940 மே 10ந் தேதியன்று அவர் பக்கிங்காம் அரண்மனைக்குச் சென்றார். திரும்பும்போது, என்னைப்பார்த்து 'நான் ஏன் போனேன் தெரியுமா?', என்று கேட்டார். 'அறிவேன்' தாங்கள் பிரதமர் பொறுப்பை ஏற்றுக்கொண்டது பற்றி என்னுடைய மகிழ்ச்சிகள்,' என்றேன், ஒரு விநாடி என்னைப் பார்த்துவிட்டு, "சபாஷ்!" என்றார். அவருக்கு வரும் ஆபத்துக்களை முன்கூட்டி அறியும் பொறுப்பிலிருந்த எனக்கு இதுகூடவா தெரிய முடியாமல் போகும்?



போர்க்காலப் பிரதமராக அவர் இருந்தபோது, அவர் வேலை செய்வதே ஒரு புது முறையாயிருக்கும். காலை 8-மணிக்கு அவருடைய 'உலகம்' ஆரம்பமாகும். எழுந்ததுமே, படுக்கையிலிருந்தபடி அன்றையப் பத்திரிகைகளை சுமார் 20-நிமிடங்கள் பார்ப்பார். பிறகு காலையுணவை (படுக்கையறையில் தான்!) அருந்தியபடி சர்க்கார் சம்மந்தமான புதுச் செய்திகளைக்கொண்டு வரச்சொல்லி கவனிப்பார். காலையுணவுடன் இந்த வேலையும் முடியும். பிறகு, படுக்கையில் சாய்ந்த வண்ணம், புகழ்பெற்ற அவருடைய சுருட்டைக் கொளுத்திக்கொண்டு, தன்னுடைய உத்தரவுகளையும் முக்கிய கடிதங்களையும் சொல்ல ஆரம்பிப்பார். குறிப்புகள் அடங்கிய பழுப்பு நிறப் பெட்டி, படுக்கையருகில் எப்போதும் இருக்கும். அதைக் திறந்துவிட்டால் அவருடைய 'ஆபீஸ்' ஆரம்பமாகிவிட்டதாக அர்த்தம். படுக்கையிலிருந்தபடி, தன்னுடைய காரியதரிசியிடம் பகல் 1-மணி வரை, உத்தரவுகளையும் கடிதங்களையும் சொல்லுவார். இந்தச் சமயத்தில், 'போன்' மூலம் சர்க்கார் அதிகாரிகளை அழைத்தும் ஆலோசிப்பதுண்டு. அது முடிந்ததும் வெந்நீரில் குளிப்பார். சாப்பிடுவார். மீண்டும் படுக்கச் செல்வார்! பகலில் படுக்கைக்குச் செல்லும்போது, ஒரு கருப்புக் கைக்குட்டையால் கண்களை மூடிக்கொள்வார். எங்காவது 'வெகு தூரம் காரில் போகும்போதும், இப்படிக் கட்டிக்கொள்வார். உடனே தூங்கியும்விடுவார்! ஒரு மணி நேரம்; பிற்பகல் தூங்கியதும் எழும்புவார். குளிப்பார். இரவு உணவு அருந்தியதும், ஏதாவது ஒரு சினிமாக்காட்சி காண்பது இவரது பொழுதுபோக்கு. இதற்காக தனிவசதிகள் உண்டு. சினிமாபார்த்து முடிந்ததும், வேலையைக் கவனிக்கச் சென்றுவிடுவார்! பிறகு விடிய விடிய கண்விழிப்புதான்!! இவருக்கு அப்போதைக்கப்போது தோன்றும் யோசனைகளையும், எண்ணங்களையும் குறிப்பெடுத்துக்கொள்ள காரியதரிசியும் கண்விழித்துத்தான் ஆகவேண்டும். இவருக்குப் பல காரியதரிசிகள் உண்டு. எப்போதும் யாராவது ஒருவர் கூட இருந்தே ஆகவேண்டும்!

சர்ச்சில் தன்னுடைய பிரசங்கங்களைத் தயாரிப்பது அலாதியான முறையாகும். சுருட்டைக் கையில் பிடித்தவண்ணம், அறையில் இங்குமங்கும் நடந்த வண்ணம், தான் பேசப்போகும் விஷயம்பற்றிப் பேசுவார்! காரியதரிசி வேகமாக உடனுக்குடன் அதை 'டைப்' செய்ய வேண்டும். அப்போது அறை நிசப்தமாக இருக்கும். சிறு தடங்கலேற்பட்டாலும் பிரமாதமான கோபம் வந்துவிடும். மிகவும் சோகமான சம்பவம் குறித்தோ அல்லது போர் முனையிலேற்பட்ட சாவுகள் பற்றியோ அவர் பேசும்போது; கண்களில் தாரை தாரையாக கண்ணீர் வழியும்; தேம்பித்தேம்பி உணர்ச்சி மிகுதியால், அவர் அழுவதும் உண்டு.

போர்க்கால மந்திரி சபையின் செக்ரட்டரியாகயிருந்த ஜெனரல் சர் ஹேஸ்டிங்ஸ் இஸ்மேயை ஒரு நாள், இவர் கடுமையாகக் கோபித்துக் கொண்டார். 'என்ன இப்படி கோபித்துக் கொண்டாரே!', என்று எண்ணி இஸ்மேயைச் சந்தித்து, 'என்ன காரணம்?' என்றுகேட்டேன். 'காரணம்ஒன்றுமில்லை. என்னவோ, கோபம். அதை என் மீது காட்டிக்கொண்டார். அப்படிக் கோபித்துக் கொள்வது அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது, வேலைப்பளு மிகுந்த அவரை உற்சாகப் படுத்துகிறது என்றால் எத்தனை தடவை வேண்டுமானாலும் கோபித்துக் கொள்ளட்டுமே!", என்றார். இதை நான் சர்ச்சிலிடம் சொன்னபோது, விழுந்து விழுந்து சிரித்தார்.

என்போன்றவர்களிடம் இவர் காட்டிய அன்பும் ஆதரவும் அதிகம். இவரும், ரூஸ்வெல்டும் ஒருமுறை இரகசியமாகச் சந்தித்தார்கள். எனக்கு ரூஸ்வெல்டைப் பார்க்கவேண்டுமென்று ஆசை. இதை, ரூஸ்வெல்டின் காரியதரிசியிடம் சொன்னேன். இதைக் கேள்விப்பட்ட சர்ச்சில், தானே என்னிடம் வந்து என்னை அழைத்துச் சென்று ரூஸ்வெல்டிடம், "என் நிழல்" என்று பெருமிதமாக அறிமுகம் செய்தார். இவருக்கு, மக்கள் மத்தியில் போவதன்றால் ஆசை அதிகம்! அப்படிப் போகும்போது, நிச்சயம் சுருடடை வாயிலோ கையிலோ வைத்திருப்பார்!! இதற்கு அவர் ஒருமுறை தந்த விளக்கம், 'மக்கள் என்னை இப்படித்தான் காண ஆசைப்படுகிறார்கள். அவர்களது ஆசையை நான் ஏன் கெடுக்க வேண்டும்?' என்பதுதான்!!"

—"வண்டு"

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகிறது.